



# வியூகம்

இதழ் - 05
மார்ச் 2021
200 இலங்கை ரூபாய்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Lee Isaac Chung

# விடியலைத் தேடி

- லேகா ராமசுப்பிரமணியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்குநர் லீ ஐசக் சங்கின் "மினாரி"(2020), அமெரிக்காவில் குடியேறிய கொரிய குடும்பம் ஒன்றின் வாழ்க்கைப் போராட்டத்தை குறித்தது. 1980களில் நடப்பதான இக்கதை இயக்குநர் லீயின் வாழ்வில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டது. மொழி, இனம், கலாச்சாரமென அனைத்திலும் வேறுபட்டு நிற்கும் அக்குடும்பம், அயற் சமூகத்தில் வேரூன்ற எடுக்கும் பிரயத்தனங்கள் காட்சிப்படுத்தப்பட்ட விதம் நேர்த்தி. இத்திரைப்படத்தின் கதாபாத்திரங்கள் எளிமையானவர்கள், அயராது உழைக்கத் துணிந்தவர்கள், கனவினை எட்டிப் பிடிக்க தொடர்ந்து முயன்றுகொண்டிருப்பவர்கள். ஏமாற்றங்கள், வாக்குவாதங்கள், குழப்பங்களுக்கு மத்தியில் சிரித்து மகிழ்ந்திடும் அழகிய தருணங்களையும் பெற்றவர்கள். நிஜமான நிகழ்வுகளும், மறுக்கவியலா வாழ்வின் எதார்த்தங்களும் ஒன்றிணைந்த உளவியல் படைப்பாக மினாரி உள்ளது.

துவக்க காட்சியில், அமெரிக்காவின் அர்கன்சாஸ் மாநிலத்தில், வயல் வெளிகளைக் கடந்து ஆள் அரவமற்ற ஒதுக்குப்புற நிலப்பரப்புக்கு பயணப்படுகிறது ஜேக்கப்பின் குடும்பம். மனதை வருடும் பின்னணி இசையுடன் கூடிய அக்காட்சியின் அழகியல் பின்வரும் ஒப்பற்ற காட்சியனுபவத்துக்கு நம்மை தயார்செய்கிறது. ஜேக்கப் - மோனிகா தம்பதியினர், கோழிக் குஞ்சுகளை பாலினம் கண்டு பிரித்துவைக்கும் 'Chicken Sexers' என்றழைக்கப்படும் பணி செய்பவர்கள். அதில் வரும் வருமானம் அவர்களுக்கு போதுமானதாக இல்லை. ஜேக்கப்பின் கனவுகள் பெரிது. அவன் கொரியகாய் மற்றும் பழ வகைகளை அதிக அளவில் விளைச்சல் செய்யவிரும்பியே கலிபோர்னியாவை விடுத்து இந்த புதிய இடத்தை தேர்ந்தெடுக்கிறான். குழந்தைகளுக்கு தான் ஏதேனும் சாதித்து காட்ட வேண்டும் என்கிற முனைப்பே அவனது அத்தனை முன்னெடுப்புகளுக்கும் ஆதாரமாக உள்ளது. "Daddy is going to make a big garden " என பிள்ளைகளிடம் தெரிவிக்கும் சமயம் அவனிடத்தில் தெரிவது எதிர்காலத்தின் ஒளி.

மோனிகா, சராசரி குடும்பத் தலைவியின் குணாதிசயங்கள் கொண்டவள். ஜேக்கப்பின் விவசாயத் திட்டங்கள் மீது நம்பிக்கையற்று இருக்கிறாள். அதுவரை சேர்த்துவைத்த பணம் யாவற்றையும் இழக்க நேரிடுமோ என்கிற அச்சம், கூடுதலாய் மனிதர்களை விட்டு வெகுதூரம் விலகி இருக்கும் வெறுமையான வாழ்க்கையும் அவளை தைரியம் இழக்கச்செய்கின்றன. அதன் பொருட்டே கொரியாவில் இருந்து தன் தாயாரை வரவழைத்து உடன்வைத்துக் கொள்கிறாள். அத்தம்பதியினருக்கு டேவிட் - அன்னா என இருகுழந்தைகள். சிறுவன் டேவிட்டுக்கும் மோனிகாவின் தாயார் ஸூஞ்சாவுக்கு இடையே நிகழும் உரையாடல்கள் நகைச்சுவை நிரம்பியவை. துவக்கத்தில்



முதியவளின் வருகையை முற்றிலுமாக வெறுக்கிறான் டேவிட். அவளுக்கு பிஸ்கட்டுகள் செய்யத் தெரியவில்லை, ஆங்கிலம் புரியவில்லை, அவள் உண்மையான பாட்டி இல்லை என புகார் சொல்லி அவள் மீது கொரியாவின் வாசனை உள்ளதாக கோபித்துக் கொள்கிறான். ஸூஞ்சா துடுக்கானவள், நாகரீகமாக உடையணிய தெரியாதவள், மோசமான வசைச் சொற்கள் பயன்படுத்துபவள், இருப்பினும் தன் அனுபவங்களின் வழி தெளிவு பெற்றவள். வாழ்வின் எதார்த்தத்தை உணர்ந்த அந்த முதியவளின் அன்பு முடிவற்றது. அதுவே டேவிட்டுக்கும் அவளுக்குமான இடைவெளியை நிரப்புகிறது.

இறுக்கமான கதைச் சூழலை இலகுவாக்குவது இவர்கள்தான். டேவிட் ஒரு இருதய நோயாளி. அவனுக்கு தேவை இரக்கமோ பரிதாபமோ இல்லை என்பதை ஸூஞ்சா மட்டுமே உணர்ந்திருக்கிறாள். பாட்டியும் பேரனும் செலவிடும் பகல் பொழுதுகள் அற்புதமானவை. அவள் நீதிக்கதைகள் போதிப்பவள் அல்ல. மிகச் சாதாரண உரையாடல்களில் சில பேருண்மைகளை விட்டுச் செல்பவள். "Things that hide are more dangerous and scary" என மரத்தில் இருக்கும் பாம்பை காட்டிச் சொல்கிறாள். மனக் கவலைகளை பூட்டி வைப்பதும் அதன் பொருட்டு அமைதி இழப்பதும் பேராபத்து என்பதே அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமென தோன்றுகிறது. பல்வேறு உள்ளடுக்குகள் கொண்ட இப்படத்தில் முதியவளும் சிறுவனும் வரும் காட்சிகள் தனித்துவமிக்கவை. நம் பால்ய நினைவுகளை மீட்டெடுப்பவை. டேவிட்டாக நடித்துள்ள ஆலனின் குறும்புத்தனமிக்க நடிப்பு வெகு இயல்பு.

குடும்பத்தின் நிலையை உயர்த்திட இரவும் பகலும் தன் நிலத்தில் பாடுபடும் பொறுப்பு மிக்கதந்தையாக நடித்துள்ள ஸ்டீபன் அக்கதாபாத்திரத்துக்கு உயிர்தந்துள்ளார். சமீபத்தில் வெளியான '*Burning*' திரைப்படத்தில் தன் ஆரவாரமற்ற நடிப்பால் கவனம் பெற்றிருந்த ஸ்டீபனுக்கு இது மற்றுமொரு மைற்கல். தன் முயற்சிகளுக்கு உறுதுணையாய் இல்லாமல் அவனை விட்டு விலகிச் செல்ல தயாராகிக்கொண்டிருக்கும் மனைவியிடம் ஜேக்கப் மனமுருகி பேசும் இடங்கள் ஆத்மார்த்தம். பொருள் ஈட்ட அமெரிக்கா வரத் தீர்மானித்ததையும், அவர்கள் ஒருவரை ஒருவர் எந்த சூழலிலும் பாதுகாத்துக் கொள்வதாய் சத்தியம் செய்து கொண்டதையும் மனைவிக்கு நினைவூட்டும் காட்சி நெகிழ்ச்சியானது. அவனது லட்சியத்தின் பயன் அவனுக்கானது அல்ல, அது அவனது தலைமுறைக்கானது. ஒரு குடும்பத்தின் ஆணி வேர் இப்படியான மனிதனிடமிருந்தே துவங்குகிறது.

முதியவள் ஸூஞ்சா கொரியாவில் இருந்துகொண்டு வந்த மினாரி செடியின் விதைகளை அங்குள்ள ஓடைக் கரையோரம் நட்டுவைக்கிறாள். ஒரு முறை அப்பயிர் வாடி பின் உயிர்பெற்றால் அதன் வளர்ச்சி பலமடங்கு வேகம் எடுக்குமென்பது அச் செடியின் குணாதிசயமாக சொல்லப்படுகிறது. மனவலிமையின் குறியீடாக மினாரியை இயக்குநர் பொருத்தி இருப்பது இங்கு கவனிக்கவேண்டியது. ஜேக்கப் தனது முயற்சிகளில் வெற்றி அடைந்தானா என்பது கேள்விக்குறி. இருப்பினும் அதற்கான விடையைத் தெரிந்து கொள்வதில் நமக்கு சிரமம் இல்லை. இது எளிய மனிதர்களின் கதை. ஏதோவொரு இடத்திலாவது நம்மை இத்திரைப்படத்தின் நிகழ்வுகளோடு தொடர்புபடுத்திக் கொள்ளமுடிகிறது கவித்துவம் மிகுந்த ஒளிப்பதிவும், அர்த்தம் நிறைந்த வசனங்களும், நம் இரக்கத்தைக் கோரும் கதாபாத்திரங்களுமென ஒரு முழுமையான காட்சி வடிவமாக இத்திரைப்படம் உள்ளது. பேரிடர் கால மனநிலையை சமன் செய்ய மினாரி போன்ற உணர்வுப்பூர்வமான படைப்புகளின் தேவை அதிகம் இருப்பதே உண்மை.

■

# டணிஸ்கரன் கவிதைகள்



## திறக்கப்பட்ட மூாக் ப்ரெவரின் கல்லறையில் எழுதப்பட்ட சொற்கள்

யாரோ திறந்துபோட்டுவிட்ட
கதவுகள் ஊடே நுழைகிறேன்
தகர்க்கப்பட்டிருந்தது
ழாக் ப்ரெவர் தூங்கிக்கொண்டிருந்த
நாற்பது வருட பழமையான கல்லறை.

நேற்றிரவு நீதானே என்னை எழுப்பியது
சொல்லு என்ன வேண்டும் என்னிடம்
கேட்கும்போதே உதடுகளுக்கு நடுவே
சொருகி இருந்த சிகரட்
ஒரு கிழவனைப்போல
ஒரு குடிகாரனைப்போல
ஒரு ஆத்திரக்காரனின் கைவிரல்களைப்போல
நிதானமிழந்திருந்ததை கவனித்தேன்

சிகரட் வேண்டுமா என்று கேட்டார்
சொற்கள் சொற்கள் என்று தடுமாறினேன்
என்ன சொற்கள் என்று உறுமினார்

கைதிகள் எல்லாம் குற்றவாளியா
சூரியன் ஏன் அவர்களுக்கு பிரகாசிப்பதில்லை என
அழுத்திக் கேட்டேன்

ப்ரெவரின் சொற்கள்
என் காதுகளுக்குள் வரும்
அந்த இடைவெளிக்குள் மின்னலென
வந்து மறைந்தார்கள்
உதிரம் வடிந்து உறைந்த உடம்பில் சீழ்வடிந்தபடி சில
போராளிகள்

திறந்தவெளியில் அமர்ந்தபடி
எல்லாமே நல்லபடி இருக்கின்றன
என்று எழுதிக்கொண்டிருக்கின்ற
மற்றவர்களின் பேனாக்கள்
இருட்டறையில் இருப்பவர்களை எழுதுவதில்லை என்று
கண்டனம் செய்தார்.

o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



<u>வனத்தை வாசிப்பவன்</u>

உங்கள் ஒவ்வொருவரும் குறித்து
விலை குத்தப்பட்டிருப்பது பற்றிய
உண்மைகளில் வருகின்ற
ஏதாவது ஒரு கவிதை
அல்லது கதை
அல்லது ஒப்பாரி
இதில் ஏதாவது ஒன்றாகிலும்
உங்களில் யாருக்காவது தெரியுமா

உங்களோடு சேர்ந்து வளரும்
விலைகளுக்கு கேள்விகள் அதிகம்

உங்கள் எதிர்காலம் பற்றிய
காக்கை குருவிகளின் பாடல்களையாவது
எப்போதாவது கவனித்ததுண்டா

இரைகின்ற காகத்தின்,
கீச்சென்ற குயிலின்
அல்லது கிக்கிலிப் பேயின்
இன்னும் இன்னுமாக கேட்கும்
பறவைகள் ஒவ்வொன்றினதுமான
ஒப்பாரிகளை வாசிக்கின்றேன்.

ஒவ்வொன்றிலும் எழுதப்பட்டிருக்கிறது
ஏதோ ஒரு வனத்தின் பாடல்.

o

# டணிஸ்கரன் கவிதைகள்



<u>கனவுலகவாசி</u>

அவள் இல்லாத இந்த இரவை
நேற்றுப் போலவே இன்றும் கடந்தாக வேண்டும்
கூரைகளுக்குக் கீழே நட்சத்திரங்களை
அழைத்தேன்
அறைக்குள் வந்த நட்சத்திரங்கள் வானத்தை வரைந்தன.
திடீரென மின்னலும் முழக்கமுமாக
கலகப்படுகிறது அறை

இப்போதே
நிலவில்லாத அந்த வானத்தில்
கரு மேகங்களை மட்டும்
அழித்து விடுகிறேன்.


இடிமுழக்கம் ஓயத்தொடங்கியதை
இப்போது உங்களால் உணர முடிகிறதா

கவிஞர்களிடமிருக்கும் வித்தைகளில்
ஒன்றுகூட கிடுகுக் கூரைகளுக்கு கீழே
ஒழுகும் மழையை பானைகளிலும்
சட்டிகளிலும் இன்னுமான பழைய பாத்திரங்களில்
சேமிக்கும் குடும்பங்களுக்கு மட்டும் ஏனோ பலிப்பதே
இல்லை.

o


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹசீன்




'ஆற்றில் ஒரு பூ' கவிதையை வீடியோ காட்சியாக மாற்றுவது சுலபம் என்றுதான் நினைத்து தேர்வு செய்தேன். ஆனால் அதுக்குள் இருக்கும் செவ்வானம் ஒரு கம்யூனிச வாழ்க்கையை சாதாரணமாக கடந்து போகும் என்று நினைக்கவில்லை. அது தெரிந்தபோது காட்சிப்படுத்தலில் செவ்வானத்தையோ மூங்கில் புதரையோ ஆற்றையோ எதையொன்றுமே விட முடியவில்லை. அந்த காட்சிப் படிமத்தைத் தேடிக் கொண்டிருந்தேன்.

கொழும்பிற்கு நான் சென்றால், தங்கும் அறைநண்பர்கள் பொழுதுபோக்காக மலை ஏறுபவர்கள். மலையகத்தை சேர்ந்தவர்கள். அவர்களுடைய புகைப்படங்கைளைப் பார்க்கும்போது ஆறும் மூங்கில் புதருமாக ஓரிடம் தட்டுப்பட்டது. அது அந்த நண்பர் ஹனிக்கின் வீட்டின் பின்புறம் இருக்கின்ற ஆறுதான், இதை விடவும் சிறப்பான இடம்... பிடித்து விடலாம் என்றார். மறுநாள் புறப்படலாம் என்றேன். ஹனிக்கும் சரி என்று சொன்னார். அவரை மூன்று நாட்களுக்கு முன்னர் வேலையை விட்டுத் தூக்கியிருந்தார்கள். காரணத்தை அறையில் இருக்கும் யாரிடமும் சொல்லவில்லை. பர்ஹான் கேட்டபோதும் சொல்லவே முடியாத காரணம் என்றார். எப்படி அழுத்தமாக இருக்கிறார், நம்மால் இப்படி இருக்க முடியாது அல்லவா என்று பர்ஹானும் நானும் பேசிக்கொண்டோம். அவர் அதற்கு முதல் நாள் ஒரு ஐ போன் டுபாயில் ஓடர் பண்ணியிருப்தாகவும் அஸ்கரிடம் குறைகிற பன்னிரண்டாயிரத்தை கடனாக வாங்கி போட்டுவிட வேண்டும் என்று சொன்னார். ஏன் இப்ப இருக்கிற போன் நன்றாகத்தான் இருக்கு என்றேன். ஒரு லெட்சத்தி நாற்பதாயிரத்திட போனை அவள் எனக்கு தொண்ணூறுக்கு ஒரு ஆஃபரில் எடுத்து வெச்சிருக்காள். அதான்.. என்றார். வேறு பொறுப்புக்கள் இல்லாத பிள்ளைகள் அனுபவிக்க வேண்டியதுதான் என்று நினைத்து கொண்டேன்.

அஸ்கர் அறைக்கு வந்து போனார். ஹனிக் கேட்பதற்கிடையில் அஸ்கர் என்னோடு வந்து ஆபிசுக்கு கிளம்பிவிட்டார். ஹனிக் போனில் சாட்டிங்கில் இருந்ததாலோ அல்லது அவ்வளவு சீக்கிரம் போய்விடுவார் என்று எதிர் பார்க்காததாலோ காசு கேள்படவில்லை. காலையில் போக வேண்டும் என்று சொன்னபோது. 'காசு போடவேண்டும், அவள் போனை எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறாள்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார். நான் அஸ்கரிடம் போன் பண்ணி "ஹனிக்கு பனிரெண்டு காசு வேணும் மாசக் கடைசிலே தருவார் என்றேன்". "ஆஃபிசில் இருக்கன்.. வந்து வாங்கிக்க முடியுமா" என்றார்.

தெஹிவளையில் இருந்து பத்தரேமுல்ல ஒரு துருவத்தில் இருந்து இன்னொரு துருவம். அஸ்கர் எந்த நிர்பந்தமும் இல்லாமல் இங்கே இருக்கிறார். ஒரு மணித்தியாலம் பயணத்துக்கே போய்விடும். மனதுக்கு பிடித்த ஒரு பிரதேசத்துக்காக எவ்வளவு அலைச்சல். இன்றைக்கு ஒருதரம் நம்மால் போக முடியாதா? வருவதாக சொன்னேன். அப்பிடியே போகும் வழியும்தான். வெளியே வந்ததும் அஸ்கரோடு வேலைசெய்யும் இர்பானிடம் போன்செய்து ஊருக்குப் போகும் எண்ணம் இருக்கிறதா, நாங்கள் மாவனல்லை பக்கம்தான் போகிறோம் என்றேன். "அவர் வாருங்கள் பார்க்கலாம்" என்றார். போனதும் உள்ளே வரும்படி அஸ்கர் அழைத்தார். நாங்கள் போகும்போது படப்பிடிப்புக்கான கேமரா போன்ற பொருட்களுடன் சென்றதால் உள்ளே அனுமதிக்கவில்லை. தகவல்கொடுத்ததும் சிறிது நேரத்தில் வெளியே வந்தார். அங்கே இர்பான் வந்து சேரும் வரைக்கும் ஒரு டீ குடித்தோம். அவர் ரெக்கோர்டிங்கில் இருந்ததால் வர தாமதமாகிக் கொண்டே இருந்தது. ஹனிக் வங்கிசென்று பணத்தை பர்ஹானுக்கு போட வேண்டும். அவர் அதை ஹவாலா மூலம் உடனே அனுப்பி வைப்பார். பணத்தை போடும்போது இர்பானிடமிடமிருந்து அழைப்பு வந்தது இன்றைக்கு வரமுடியது என்று. பன்னிப்பிட்டி சந்தியில் கண்டி பஸ்ஸிற்காக ஒருமணி நேரம் காத்திருந்தோம். பஸ் சரியான கூட்டத்தோடு வந்தது. இவ்வளவு சாமன்களுடன் மூன்று மணிநேரம் சீற் இல்லாமல் பயணிக்க முடியாது என்பதால் புறக்கோட்டைக்கு மீண்டும் ஒருமணித்தியாலப் பயணம். அங்கிருந்து மாவனெல்லை அரநாயக்கா நோக்கி கண்டி பஸ்ஸில். சுமார் நான்கு மணிக்கு மாவனல்லையில் பகல் சாப்பாட்டை முடித்துக் கொண்டு அரநாயக்காவுக்குப் புறப்பட்டோம். புறப்பட்டதில் இருந்து மிக உயரமான மூங்கில் புதர்களை பஸ்தாண்டி சென்று கொண்டிருந்து. நான் ஹனிக்கிடம் அவற்றை காண்பித்து "நிறைய மூங்கில் இருக்கிறது.. ஆறும் சேர்ந்து கிடைக்குமா என்றுதான் தெரியவில்லை" என்றேன். இவை ஆற்றோரம்தான். ஆனால் ஆறு சுமார் முப்பதடி பள்ளத்தில் ஓடிக்கொண்டிருந்தது. கேமராவின் சட்டகங்களுக்கு சிக்காது போல் தோன்றியது. ஹனிக் காசு கொடுத்தாகி விட்டது. ஆனால் நாளைக்குதான் அவளின் கைக்குக் கிடைக்கும் என்று பர்ஹான் சொல்வதாக பதட்டத்துடன் இருந்தான். தன்னிடம் இருந்த காசைக் கொடுத்து ஹோட்டலில் தங்கி விட்டதால். இன்றைக்கு செக்கவுட்பண்ண பணம் தேவை.. இந்தக் காசையே நம்பியிருப்பதாக அவள் அவசரப்படுத்தி கொண்டே இருந்தாள். பர்ஹானுக்கு போன் பண்ணி ஏதாவது செய்யமுடியுமா என்று ஹனிக் கேட்டு கொண்டிருந்தார். பர்ஹானும் ஏதோ எல்லாம் முயற்சி பண்ணிக் கொண்டிருந்தார். சாட்டிங் ஓடிக்கோண்டிருந்தது. பஸ் மலைப்பாதைகளில செல்வதால் விசாலமான ஆறு இருக்குமா என்று நான் ஹனிக்கிடம்கேட்டேன். "இருக்கு நானா" என்று சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு இடத்தில் "இதுதான் எங்கள் வீடு" என்றார். மழை வேறு லேசாக தூற ஆரம்பித்திருந்தது. நான் இது எவ்விடம் என்று கேட்டேன். அரநாயக்கா என்று சொன்னார். "வெளிச்சம் போய்க்கொண்டிருக்கிறது.. இன்னும் தூரமா" என்று கேட்டேன். "பக்கத்திலேதான்" என்றார். "அதுக்கு முதல் மேல ஒரு நல்ல ஆறு இருக்கிறது.. பாத்திட்டு வந்திரலாம்" என்றார். ஊர்த்தன்மையான மார்க்கட்டில் இறங்கி— ஆற்றில் பூவைவிட்டால் பிடிக்க முடியாதென்பதால்— கருப்பு நூல் கட்டை ஒன்று வாங்கினோம் அதைப் பூவில் கட்டி விட்டால் மீண்டும் எடுத்துக் கொள்ளலாம். பையில் நானூறு ரூபாய்க்கு வாங்கிய இரண்டு செயற்கை பூக்கள் இருந்தன. அந்த இடத்தில் நேரம் ஐந்தே கால்போல் இருக்கும். மேலே

என் கால்களைப்பார்த்தேன்.
புறங்கால் பகுதியில்
அட்டை கடித்த
இடத்திலிருந்து இரத்தம்
வந்துகொண்டிருந்தது.
டைல்ஸில் இரத்தம்
உறைந்து போயிருந்தது.

செவ்வானம் இருப்பதற்கான சாத்தியங்கள் இருந்தது என நினைக்க வைத்தது அந்த ஈரமான நாட்டுச்சந்தையில் விழுந்த மஞ்சள் வெளிச்சம் ஒன்றுதான். ஆட்டோ ஒன்றைக் கையைப்போட்டு ஹனிக் நிறுத்தினார். சிங்களத்தில் இடத்தை சொல்ல வண்டி புறப்பட்டது. தூரமாக இருக்காது என்று எண்ணிக் கொண்டேன். அவ்வளவு குறுகலான சிமென்ட் றோட்டுகள். ஆட்டோ ஓட்டுனர் மிகவேகமாக ஓட்டினார். வயதானவர். பளபளப்பான சாமுஸ் துணியில் சேட் போட்டிருந்தார். நாவல் கலரில் சாரன். வழி பற்றியும் நேரம் பற்றியும் அவர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓயாது பேசிக்கொண்டே இருந்தார். சில இடங்களில் பாதை முடிந்தது என்று எண்ணும் அளவுக்கு சிதைந்து இருபுறமும் மரங்கள் அடர்ந்து இருந்தது. எனக்கு இதற்கு மேலும் வெளிச்சம் இருக்கும் போது போய் சேர முடியும் என்ற நம்பிக்கை அருகி மனது அமைதியாகிக்கொண்டது. இதற்கு மேல் இது இன்னும் எவ்வளவு நேரம் நிகழும் என்பதைப் பார்க்கும் மன நிலைக்கு வந்து விட்டேன். வந்ததோடு வந்தாமே இருட்டினாலும் ஆற்றைப் பாரத்துக் கொண்டாவது செல்லலாம் என்ற மனநிலைக்கு வந்து விட்டேன். ஆனால் ஆட்டோ வேகமாக ஓடிக்கொண்டே இருந்தது. ஆட்டோவை ஓட்டுபவரின் வயதுக்கு இவ்வளவு வேகமாக ஓட்ட முடியும் என்று நம்பமுடியாமல் ஓட்டினார். ஆட்டோ சிறு அருவிகளை கடந்து மலைமேல் வீடுகள் உள்ள இடத்தில் வேகம் குறைந்தது. அங்கே ஒரு பெண்ணும் குழந்தையும் புத்தருக்காக பூக்களை பறித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் ஆற்றுக்குப் போகும் வழியைக் கேட்டபோது அவர்கள் வழி மாறி வந்து விட்டதாகவும் இன்னும் கொஞ்சம் தூரம் முன்னாலேயே மேலே செல்லும் வழியால் சென்றிருக்க வேண்டும் என்றார்கள் . இந்த இடத்திலிருந்து குறுக்காகக் கால் நடையாக ஏற முடியுமா என்று ஹனிக் கேட்டார். அவள் "அது சிரமமும், கொஞ்சம் தூரமும்" என்றாள். ஹனிக் "ஏறுவோம்" என்றார் நான் வெளிச்சம் இருக்காது என்று தெரிந்தும் "மேல வெளிச்சம் இருக்குமா" என்று கேட்டேன். "ம்..." என்று சொல்லி ஆட்டோக்காரரை நிற்கச் சொல்லிவிட்டு மேலே செல்ல ஆரம்பித்தார்.

எங்களுடைய பைகளை எடுத்துக்கொண்டு அந்த சதுப்பு நிலத்தில் ஏறுவது —அதுவும் அதற்கான காலணிகள் கூட இல்லாமல்— மிகவும் சிரமமாக இருந்தது. என்னுடைய வேலைக்காகவே ஹனிக் ஏறுகிறார் எனும் போது என்னால் தளர முடியவில்லை. அவர் ஒவ்வொரு வாரக் கடைசியிலும் ஏறுபவர். எனக்கு மூச்சு வாங்கியது. முதலில் புதிதாக தேயிலை பயிரிடப்பட்ட நிலம். அங்கே வைத்து கேட்டேன். "இவ்வளவு உயரத்தில் எப்படி ஆறு இருக்கும் அருவிதானே இருக்கும்?"
"இல்ல மேல வந்து பாருங்கே" என்றார்.
"இதிலே செவ்வானம் வராதே" என்றேன். அது கொஞ்சம் கஸ்டம்தான் என்றார். மழை மேகம் சூழ்ந்து இருந்ததால் இருட்டிக் கொண்டு வந்தது. கொஞ்சம் உயரத்தில் கட்டிடம் ஒன்று தெரிந்தது. அதற்குப் போகும் வழி சுற்று என்பதால் ஏறலாம் என்று சொன்னார். ஒரு மாதிரியாகப் புற்களைப் பிடித்து ஏறும்போது "இருட்டினால் எப்படி இறங்குவது" என்று கேட்டேன். "சுற்றி வந்து இறங்கலாம்" என்றார். அந்த கட்டிடம் ஓய்வுக்காகக் கட்டுப்பட்டதுபோல் படிகள் மேலே ஏறிச்சென்றது. அது பாதை போல் ஓரிடத்தில் சேர்ந்தது. சுற்றி வந்திருந்தால் ஆட்டோவிலேயே அங்கே வந்திருக்கலாம்.

அந்தப் பாதையில் இன்னும் கொஞ்சத் தூரம் நடக்க வேண்டி இருந்தது. வெளிச்சமும் இல்லை. இருட்டும் இல்லை.. பொழுதுபட்டு விட்டது. நீர்ச் சத்தம் கேட்க ஆரம்பித்தது. ஆறோ, அருவியோ நெருங்கி விட்டோம். அது உயரத்தில் இருக்கும் ஆறுதான். கற்களால் பரந்து பாய்ந்து வீழ்ந்து ஓடியது. ஒருத்தர் அதை அருவி என்று சொன்னால் கூட மறுக்க முடியாது. பளிங்கான குளிர்ந்த நீரில் கூழாங்கற்கள் போல் பாறைகள். பாறைகளுக்கு இடையில் சிறிது தேங்கி ஓடியது. எப்போதும் செவ்வானம் வராத குளிர் அங்கே தேங்கி இருக்கும்போல் தோன்றியது. கொண்டு போன சாமன்களை கரையில் வைத்து விட்டுத்தான் இறங்கி இருந்தோம். இந்த நேரமாய்ப் பார்த்து குரங்கு எதையாவது தூக்கி கொண்டு ஓடினால் என்ன செய்வது. ஹனிக் அதற்கு "மனித குரங்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதும் எடுத்தால் ஒழிய.." என்று கிண்டலாய் சொன்னார். தண்ணீரை இரண்டு கைகளாலும் அள்ளிப் பருகினேன். முகத்தையும் கழுவிக் கொண்டேன். கேமராவை வெளியே எடுக்கக் கூட இல்லை. அவ்வளவு இருட்டு. ஹனிக் திரும்பி வரும்போது அந்த நீல இருட்டை எடுக்க போனில் முயற்சித்தார். சிறிது தூரம் வந்ததும் லெப்டோப் இருக்கும் பேக்கை விட்டுவிட்டதாக சொல்லி ஓடிப்போய் எடுத்து வந்தார். போனில் இருக்கும் டோர்ச் வெளிச்சத்தில் சுற்றி இறங்கினோம். இறங்கும் போதுதான் தெரிந்தது. அந்த வழியாலும் ஆட்டோவில் வர முடியாத அளவு மண் சரிந்து கிடந்தது. வரும் வழியில் கண் கூசும் அளவு பிரகாசத்துடன் சிறிது உயரத்தில் ஒரு வீடு. அங்கே ஒரு நாய் எங்களைப் பார்த்து வெகுவாக குரைத்தது. அங்கே ஒரு சிறுவன் நாயை அதட்டி அதனை அமைதிப்படுத்தினான். அதன் நிழல் என் மீது விழுந்தது. ஆட்டோக்காரர் பொறுமையாக அங்கே நின்று கொண்டிருந்தார். நாங்கள் அந்த காட்சியை எடுத்து விட்டோமா என்று கேட்டார். இல்லை என்றதும் அதிகாலையில் வந்தால் எடுக்கலாம் என்றும் காலையில் வருவது என்றால் அழையுங்கள் என்றும் தொலைபேசி இலக்கத்தைத் தந்தார். இவரைப்போல மலையில் ஆட்டோ ஓட்ட யாரும் முன் வரமாட்டார்கள் என்ற எண்ணத்துடன் நம்பரை வாங்கி கொண்டோம். ஹனிக்கின் வீட்டினுள் நுழைந்ததும் அவர்களுடைய தந்தை என்னை வரவேற்று உட்காரச் சொன்னார். "எங்கிருந்து வாரிங்க" என்று அவர் ஆர்வமாய் கேட்க ஆரம்பித்தார். பேச்சு தொடர்ந்து கொண்டிருக்கும் போது என் கால்களைப்பார்த்தேன். புறங்கால் பகுதியில் அட்டை கடித்த இடத்திலிருந்து இரத்தம் வந்து கொண்டிருந்தது. டைல்ஸில் இரத்தம் உறைந்து போயிருந்தது. கைகால்களை கழுவிக் கொண்டு அவர்கள் வாப்பா கொடுத்த காபி தூளை காயத்தில் தூவிக்கொண்டேன். இரத்தம் வருவது நின்று விட்டது.

மறுநாள் அதிகாலையில் எழும்பினாலும் மலைமேல் இருக்கும் ஆற்றுக்கு போக மனம் சொல்லவில்லை. கீழே இருக்கும் மூங்கில் புதரை பார்த்து விட்டுப் போவதுதான் நல்லது என்று டீ குடித்துவிட்டு நான்கைந்து வீடு தள்ளி என்பதால் நடந்து சென்றோம். வழியில் ஹனிக்கை கண்டு முதலில் ஒரு நடுத்தர வயதுப் பெண் சிரித்தார். இன்னும் ஒரு வயதான பெண்மணியும் சிரித்தார். நான் ஹனிக்கின் முகத்தைப் பார்த்தேன். "இவங்கல்லாம் எங்களே தூக்கி வளர்த்தவங்க" என்றார்.

புல்லும் பள்ளமுமான புறவளவின் உள்ளால் இறங்கி ஆற்றை அடைந்தோம். ஆறு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. நான் மஞ்சள் மூங்கிலைத்தான் நினைத்திருந்தேன். இது பச்சை. ஒரு சிறிய மஞ்சள் புதர் இருந்தது. ஆனால் ஆற்றின் இருமருங்கும் மூங்கில் வளர்ந்து வெளிச்சமும் இருட்டும் பச்சையுமாய். நீரோடும் சத்தம். மூங்கில் காற்றை உரசும் சத்தம். கேமாரவை ரைப்போடில் பூட்டிக் கொண்டு நீரில் இறங்கினோம். செயற்கைப் பூக்கள் நீரில் மூழ்கின. அல்லது குப்புறப் புரண்டன. வரும்போது பறித்துக் கொண்டு வந்த செவ்வரத்தம் பூக்களோ வேகமாக ஓடின. முதலில் ஓடி பிடித்தோம் முடியவில்லை. பூக்களை ஃபோக்கஸ் பண்ணுவதற்கு இடையில் ஓடி மறைந்தன. ஒருமணி நேரத்துக்குமேல் நேரம் கழிந்தது. காலை உணவை முடித்துக் கொண்டு நிறைய செவ்வரத்தம் பூக்களை பறித்து கொண்டு வந்தால்தான் சமாளிக்கலாம் என்று தோன்றியது. வீட்டுக்கு போய் சாப்பிட்டு விட்டு பூக்களோடு திரும்பினோம். ஆற்றில் பூக்களை விட்டு படம் எடுத்துக் கொண்டே இருந்தோம். மழை தூற ஆரம்பித்தது. கொஞ்சம் காட்சிகள் சாதகமாக அமைவதாக தோன்றியது. உடம்பில் ஏதோ அரிப்பு ஏற்படுவதை உணர்ந்தோம். ஆனால் இப்போ அது பலமாக சொறிய ஆரம்பித்து தடித்து எழும்ப ஆரம்பித்தது. அது மூங்கிலிலிருந்து விழும் ஃபங்கஸ் போன்ற ஒன்றுதான் என்று தோன்றியது. என்னை விடவும் ஹனிக்கு அதிகம் தடித்து போய் இருந்தது. இலேசாக காற்று வீசி மழை பெய்ய ஆரம்பித்தது. வேகமாக வீட்டுக்கு செல்லக் கிளம்பினோம். குடையிருந்தாலும் அதனால் பொருட்களை பாதுகாக்க முடியாது. ஆற்றில் மழை விழும் சத்தம் வீடு வந்த பின்னரும் கேட்டு கொண்டிருந்தது. அன்று மாலை ஹனிக் என்னை மாவனெல்லை வரை கொண்டு வந்து பஸ் ஏற்றி விட்டார்.

கொழும்புக்கு வந்து தெஹிவளை சபா ஹோட்டலில் போய் பரோட்டா சாப்பிட்டு விட்டு மீண்டும்அறையில் இலேசான தலைவலியுடன் தூங்கினேன். காலையில் எழுந்த போது பர்ஹான் தூங்கி கொண்டிருந்தார் நான்கு மணிவரை லண்டன் காதலியுடன் சாட்செய்து விட்டு தூங்கி இருப்பார். ஒரு மணியாகும் எழும்புவதற்கு.

நான் பக்கத்தில் இருக்கும் கடையில் சாப்பிட்டேன். எடுத்த வீடியோக்களை பார்த்தேன் தேறிய காட்சிகளை கொப்பி பண்ணிக்கொண்டேன். திரும்பவும் டீ குடித்து விட்டு வரும்போது பர்ஹான் எழும்பி பேசிக்கொண்டிருந்தார். ஹனிக்கிடம் இருந்துதான் அழைப்பு போலும். பேசி முடித்ததும் கேட்டேன் "ஹனிக்கின் டுபாய் போன் வந்து விட்டதா?"

"அது வராது... நம்ம பாக்காத ஐபோன் கேசா?.. அவர் காசு போடச் சென்ன டீட்டைல் ஒரு பிலிப்பின் குட்டியோடே போன் நம்பர். அவர்ர காசு அவ்வளவுதான்." திரும்பவும் நாங்கள் எண்ணிக் கொண்டோம் இவர்களால் எப்படி இவ்வளவு அழுத்தமாக இருக்க முடிகிறதென்று. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உண்மை எளிமை மனிதநேயம் கல்லூரன்

சிவ-வரதராஜன்

'சாமேள ஒலிகளிடை
எழும் அழுகுரல்களின் மத்தியில்
ஒரு பிற்பகல் நிறப் பொழுதில்
அல்லது சடுதியில்
ஒரு இளங்காலை நிறப் பொழுதில்
எனது சுவர்கள்
முத்திரை குத்தப்படும்
எனது பிணப்பெட்டியில்
ஆணி அறையப்படும்'

**இது** மறைந்த கவிஞர் கல்லூரனின் கவிதை ஒன்றின் சில வரிகள். அதிகம் நோய் வாய்ப்பட்டு, ஓரளவு தேறியிருந்த கல்லூரன் (பொன்னையா கணேசன்) யாரும் நினையாப் பொழுதொன்றில் (2020.07.31) இறந்துபோனார். நாளாந்த வாழ்வில் தோன்றும் மனத் துயர்களைத் தீர்ப்பதற்குநான் மதிக்கும் படைப்பாளிகள் சிலரின் கவிதைகளும் கதைகளுமே எனக்குக் கைகொடுக்கின்றன. ஒரு தோத்திரப் பாடல்போல அவை மீண்டும் மீண்டும் மனதால் ஓதப்படுகின்றன. ஒரு தியானம் போல அவை என்னைப் பரவச நிலைக்குக் கொண்டு செல்கின்றன. ஒரு பறவையின் இறகு போலமனதை பாரமற்றுப்போகச் செய்கின்றன.

இந்த விதமாகவே கல்லூரனுடனும் அவரது கவிதைகளுடனும் நான் ஒட்டி, உறவாடி வந்திருக்கின்றேன். கல்லூரனின் சுபாவமும் அவரது கவிதைகளின் இயல்பும், ஒருபோதும் வேறுபடுவதில்லை. கல்லூரனின் கவிதை என்ற நிலைக் கண்ணாடியில் அவருடைய முகம் எவ்வித ஒப்பனைகளுமின்றி எளிமையாய் தோன்றுகின்றது. உண்மையும் எளிமையும் மனிதநேயமும் நிறைந்த ஒரு ஜீவனின் வலிகளும், நிறைவேறா இலட்சியங்களும்,அழிவின் மீதான ஒப்பாரிகளுமாக அவருடைய கவிதைகள் அமைந்து விடுகின்றன. தலையைத் தடவியபடி வாழ்வின் சூட்சுமங்களை அவை காதில் உபதேசிக்கின்றன. போலிகளை அவை இனங்காட்டுகின்றன. எந்தவித எதிர்பார்ப்புகளுமின்றி தோழமையோடு கைகுலுக்குகின்றன்

கல்லூரனின் 'வெளிக்குள் வெளி' கவிதைத் தொகுதிக்கு மறைந்த கவிஞர். சண்முகம் சிவலிங்கம்அவர்கள் எழுதிய நீண்ட முன்னுரையை விட அவரது கவிதைகள் தொடர்பில் இன்னும் சரியான மதிப்புரைகள் வெளிவரவில்லை என்றே தோன்றுகின்றது. ஈழத்து நவீன கவிதை வகை மாதிரிகளுக்குள் கல்லூரனின் கவிதைகளும் வித்தியாசமான சுவையுணர்வுகளத் தருவன. குழும அரசியலுக்கப்பால் பக்கசார்பற்ற மதிப்பொன்றின் மூலம் ஈழத்தின் நவீன கவிதைப் பரப்பில் இன்றுவரையான சிறந்த கவிஞர்கள் என்று குறைந்தது பத்துக் கவிஞர்களைநாம் தெரிவு செய்தால், அவற்றுள் கல்லூரனின் பெயரும் நிச்சம் இடம்பெறும்; என்பது எனது நம்பிக்கை.

எனது வாசிப்பின் குருட்டு வெளிச்சத்தினைக் கையிலேந்தியபடி அவரது மனக்குகை ஓவியங்களை பலமுறை நான் தரிசிக்க முயன்றிருக்கின்றேன். கல்லூரனையும் அவரது கவிதைகளையும் ஓரளவிற்கேனும் புரிந்து கொண்டவன் என்ற நம்பிக்கையிலும் அவருடன் என்றுமே முரண்படாத மரியாதை கலந்த நட்பை வளர்த்துக்கொண்டவன் என்ற உரிமையிலும் அவரது கல்லறையில் பேரன்புடன் ஒரு சிட்டி விளக்கையேனும் ஏற்ற முனைவதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நினைவுக் குறிப்பின் நோக்கம். அந்த ஒளியில் அவருடைய முகம் மீண்டும் ஒருமுறை மங்கலாகவேனும் தெரியக்கூடும்.

எமது பிரதேசத்தில் கல்லூரனை பலரும் ஓர் ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளராகவோ, ஒரு நல்ல ஆங்கில மொழி பெயர்ப்பாளராகவோ, அல்லதுஒரு மதுப் பிரியராகவோ பார்த்திருக்கக்கூடும். ஆனால் கல்லூரன் நுட்பமான கவியுள்ளமும் மனிதநேயமும் மிக்க ஒரு படைப்பாளி என்பதே நான் அவரிடம் கண்டடையும் தரிசனங்களாகும்.

கடந்த *2005 – 2011* காலப்பகுதியில் நான் திருக்கோவில் பிரதேச சபையில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். கல்லூரன் அக்கரைப்பற்றிலுள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றில் பணியாற்றிக்கொண்டிருந்தார். அநேகமாக நாங்கள் இருவரும் ஒரே திசையின் பிரயாணத்தின் நிமித்தம் பேரூந்துகளில் சந்தித்துக் கொள்வதுண்டு. ஒரே ஆசனத்தில் அமர்ந்து பேசிக் -கொண்டபடியே பயணித்த அனுபவங்கள் தொழிலுக்கான தொடர் ஓட்டத்தின் சலிப்பை இல்லாது செய்திருந்தன.

இக் காலத்தில்தான் கல்லூரன் என்ற புத்தகத்தை நான் மெல்ல மெல்ல புரட்டத் தொடங்கினேன். அதன் எல்லா ஒற்றைகளையும் படிப்பதற்கு அவர் அனுமதித்ததில்லை என்பதை விட, மரியாதையின் நிமித்தம் நானே அவரது அத்தியாயங்கள் சிலவற்றை திறந்து பார்க்க விரும்பியதில்லை.

பார்ப்பதற்கு சினிமாப் படமொன்றின் வில்லன் போல அவர் தோன்றினாலும், அவருள் இலட்சியங்கள் நிறைந்த ஒரு கதாநாயகன் வெளிவரமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தான் என்பதுதான் உண்மை. கல்லூரனின் உள்ளம் மிகவும் மென்மையானது. அவருடைய வரிகளையே மாற்றிச் சொன்னால் 'எந்தப் பூவின் கசங்குதலுக்குள்ளும் கண்ணீர் சிந்துபவர் அவர்' அவருடைய கவிதைகளில் எப்போதும், ஒரு ஆன்மா - இடிபாடுகளிடையே சிக்கி, நசிந்தபடி முனகுவதை நாம் கேட்கமுடியும். ஆகக் குறைந்தது, நல்லிரவொன்றில் அகாலக் குரலெழுப்பியபடி பறந்துபோகும் ஒரு திசையறியாப் பறவையின் துயர வரிகளையாவது கேட்கக்கூடும்.

கல்லூரன் கவிதைகளுக்கூடாக தனது வாழ்வை எடுத்தியம்பும் விதம் மனதை நெகிழ வைக்கின்றது. கல்லூரன் முரண்பாடுகளை சிறுபுன்னகைகளோடு கடந்துவிடத் தெரியாதவர். முரண்பாடுகளிடையே இனிமை கலத்தல் என்பது அவருக்கு கைவராத ஒன்று. அதே நேரம் வலிந்து வலிந்து தன்னை நிலை நிறுத்தும் அரசியல் சித்தாந்தங்களும் அறியாதவர். விருதுகளுக்காக 'வில்லை வளைக்க தமது புஜங்களை உயர்த்தாத படைப்பாளிகள் ஒரு சிலரில் அவரும் ஒருவர். தனக்குப் பிடிக்காதவற்றை முகத்தில் அறைந்தாற்போல் சொல்லும் பண்பு கொண்டவர். கல்லூரன் போலிகளிடமிருந்து ஒதுங்கி இருக்கவே நினைத்தவர். ஆனால் போலிகளையும் அசல்களையும் பிரித்தறிவதில் அவர் தடுமாறினார் என்றே எண்ணத் தோன்றுகின்றது. 'சிரித்திருக்கும் மலர்களைப் / போல நான் / யாருக்காகவும் சோடித்துக் கொள்வதில்லை' என்று கூறுகின்ற கல்லூரன் 'இடுகாட்டிலும் பூத்துக் கிடப்பேன் / எனது ஒரே ஒரு முகத்துடன்' என்று தனது சுயத்தைப் பிரகடனம் செய்கின்றார்.
தன்னை தானே நான்கு சுவர்களுக்குள் சிறைப்படுத்திக் கொள்வது கல்லூரனுக்குப் பிடித்துப்போயிருந்தது. நொந்து, நொந்து கவிதைகள் மூலம் தனது

பார்ப்பதற்கு
சினிமாப் படமொன்றின்
வில்லன் போல
அவர் தோன்றினாலும்,
அவருள் இலட்சியங்கள் நிறைந்த
ஒரு கதாநாயகன்
வெளிவரமுடியாமல்
தவித்துக் கொண்டிருந்தான்
என்பதுதான் உண்மை

எதிர்ப்பையும், கனவுலகத்தையும் பதிசெய்வது அவருக்கு வழக்கமாகியிருந்தது. மனமே 'பாறையாகிப்போன பின் / ஒரு மாரியின் குளிர்மையும் / ஒன்றுதான் / ஒரு கோடையின் / தணலும் ஒன்றுதான்" என்று வாழ்வை தினமும் அலுத்துக்கொண்டவர். வாழும்போதே தன்னை மரித்துப் போன ஒன்றாக உணர்ந்து கொண்டவர். அடிக்கடி தனது பிணத்தினையே கனவு காண்பவர். தனக்கான கல்லறையை தனது கவிதைகளாலேயே கட்ட முனைந்தவர்.

ஆண்டாண்டுகாலமாய் மகத்தானவை
என்று நம்பிவந்த பண்பாடுகளையும்
மத நம்பிக்கைகளையும் மானிட / சமூக
விடுதலைக்கான வழிமுறைகளையும் தனது
கவிதைகள் மூலம் கேள்விக்குட்படுத்துகின்றார்.
மாறாக மனித நேயமொன்றே மேலானது
என்று வாக்குத் தத்தம் செய்கின்றார்.

இந்த உலகம் பற்றிய ஓராயிரம் அதிருப்திகள்
அவரிடமுள்ளன. பல நேரங்களில் அவரது
துயரங்கள் அவருக்கே புலப்படாதவை.
தனது தலைக்கு மேலே எல்லையற்று
விரியும் பிரபஞ்சமே அவர் வியந்து வியந்து
முன்மொழியும் விடயம். மனித சமூகம் -
மதமென்றும், மொழி என்றும், தேசம் என்றும்,
பண்பாடு, கலாசாரம் என்றும் வகுத்து
வைத்திருக்கும் எல்லாவித வரையறைகளையும்
தாண்டி,இந்தப் பிரபஞ்சத்தில் வெளிக்குள்
வெளியாக சஞ்சரிக்கும்; பரந்த, விரிந்த
பார்வையுடன் இந்த உலகத்தைக்
காணவிரும்பியவர்.

இதுவரை கல்லூரனின் இரண்டு கவிதை
நூல்கள் மட்டுமே வெளிவந்துள்ளன.
இவற்றில் முதலாவது தொகுதி "வெளிக்குள்
வெளி" என்பதாகும். எழுத்தாளரும்
கல்லூரனின் இலக்கிய நண்பர்களில்
ஒருவருமான திரு. உமா - வரதராஜன்
அவர்களின் 'வியூகம்' வெளியீடாக கடந்த
*1997*ஆம் ஆண்டு அது வெளிவந்தது. அடுத்த
தொகுதி 'மனிதனாய் இருப்பதின் பெருவலி.'
இது திரு. றியாஸ் குரானா அவர்களின்
முயற்சியில், "புது எழுத்து" பதிப்பகத்தால்
*2012*ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.
இந்த இரண்டிலும் சுமார் அறுபது தமிழ்க்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள் உள்ளன. இவைதவிர அவர் எழுதிய ஆங்கிலக் கவிதைகள் நூலுருப் பெறவில்லை. இதற்கான முயற்சியொன்று அவரது குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ் ஆங்கிலக் கவிதைகளின் எண்ணிக்கை சுமார் *128* என்று அறிய முடிகின்றது.

நுண்மையான கலையுணர்வும், தேடலும், ஆங்கில இலக்கியப் பரிட்சியமும், இறுதிவரை நீறுபூத்த நெருப்பாக அவரிடம் காணப்பட்ட மாக்சீய மனோபாவமும், இயல்பாய் இருத்தல், அன்பு செய்தல் போன்ற தத்துவங்களும் அவருக்கு இலக்கிய முதிர்ச்சியைக் கொடுத்திருந்தன.
கல்லூரன் தனது வலிகளையும் நம்பிக்கைகளையும் ஒளிவு மறைவின்றி தனது கவிதைகள் ஊடாக முன்வைத்தவர். மனிதனாய் இருக்க விளைவதே பெரும் வலிகள்நிறைந்தவை என சட்சியமளிக்கின்றார். போரின் அழிவுகள் அவரையும் வெகுவாக துன்புறுத்தியுள்ளன. ‘ஒரு சிறு குழந்தைகூட / எனது நெற்றிப் பொட்டில் /அழுத்துகிறது துப்பாக்கியை.’ எல்லோருடைய மனதிலும் / எல்லோருக்குமான விசாரணைகள் / நடந்து கொண்டே இருக்கின்றன.’ என்று கூறுகின்றார். ‘ஆயிரம் சிப்பாய்கள் இறந்ததாக / நீங்கள் மகிழ்ந்து சொன்னபோது / மனிதர்கள் இறந்து போனதாகவே / எனக்குக் கேட்டது’ எனக் கவலை கொள்கின்றார். ‘எனது இதயத்து வேர்களை / பிய்த்து எறிந்து பெறும் /விடுதலை எனக்கு எதற்கு’ என்று கேட்கின்றார்.

கல்லூரன் தனது மன வலிகளை மறப்பதற்கும் வாழ்வைக் கொண்டாட முனைவதற்கும் மது நிரம்பிய கண்ணாடிக் குவளைகளையே அதிகம் நம்பியிருந்தார். ‘ஒரு மதுக்குவளைக்காய் / அதில் என்னைக் கரைத்து தொலைத்து / ஒரு செடியில் காற்றாக அசைவதற்காய்../ எல்லாக் குடிகாரனும் சொல்வது போல் / நானும் என் வலிகளைத் தாங்கிக் கொள்ள வேண்டும் / என்பதற்காய் / எந்தச் சுடுகலனும் தேவையில்லை எனக்கு / நான் மெல்ல மெல்ல சாகவேண்டும் என்பதற்காய்’ எனத் தைரியமாக சொல்கின்றார்.

கல்லூரனின் கவிதை மொழியும் அவரைப் போன்றே சோடனைகள் அற்றவை. அதிகம் வலி நிறைந்த வார்த்தைகள் கொண்டு பின்னப்பட்டவை. விரிந்துகொண்டே இருக்கும் மௌன வெளிகளால் நிறைந்தவை. வரிக்கு வரி வியாபித்திருக்கும் பனிப்புகார்களை ஊடுருவி கூர்மையான பார்வைகள் மூலம் மறைந்திருக்கும் அகக் காட்சிகளை கண்டுணரும்படி வாசகனுக்குப் பொறுப்பளிக்கப்பட்டவை.

கல்லூரன் கவிதை புனைவதில் காட்டும் ஈடுபாட்டை மொழி பெயர்ப்பிலும் காட்டியிருக்கலாம் என்பது நான் உணரும் குறைகளில் ஒன்று. எனினும் நானறிய ‘குறிஞ்சி பூத்தாற்போல்’ ஓரிரு படைப்புகளை அவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கின்றார். உமா – வரதராஜனின் ‘கள்ளிச்சொட்டு’ என்ற சிறுகதை (Cactus Dribble) கல்லூரனால் மொழிபெயர்க்கப்பட்டு Daily News இல் வெளிவந்தது. அதேபோன்று,Third eye இல் வெளிவந்த திருக்கோவில் கவியுவனின் ‘பயணம்’ (Journey) என்ற சிறுகதையும் சோலைக்கிளியின் ‘ஒரு நத்தையின் பாடல்’ ( Handkerchief of a girl) என்ற கவிதையும் அவராலேயே மொழி பெயர்க்கப்பட்டவை. கல்லூரன் தனது இறுதிக் காலத்தில் தனது ஆங்கிலக் கவிதைகளை ஒரு நூலாக வெளியிடும் பொருட்டு கனவு கண்டிருந்தார். ஆனால் அவர் இறக்கும் வரை அது கைகூடாமலே போயிற்று. இறப்பதற்கு சில வாரங்களுக்கு முன் தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டு பேசினார். அவரின் அதே கம்மிய குரல் சற்று கரகரப்புடன். ‘நான் இன்னும் கொஞ்சக் காலந்தான் உயிரோட இருப்பன். அதற்குள் எனது ஆங்கிலக் கவிதைகளை புத்தகமாக கொண்டுவர வேண்டும். அதற்கான முழுச் செலவையும் நானே பொறுக்கிறேன். நீங்கள் எல்லோரும் உதவிசெய்ய வேண்டும். உங்கட அமைப்பால அதனைக்கொண்டு வருவோம். யோசித்துச் சொல்லுங்க’ என்று கூறினார். ஆங்கில கவிதைகளா?... வீடு மாறிவந்து எனது கதவைத் தட்டுகிறாரோ என்று எண்ணிக்கொண்டேன். எனினும் நான் மறுப்பெதுவும் சொல்லவில்லை. முன்னுரை ஒன்றை பொருத்தமானவரிடமிருந்து எடுங்கள், போடுவோம்’ என்றேன்.

இன்று கல்லூரன் எம்மிடையே இல்லை. ஆனால், அவரது கவிதைகளும் நினைவுகளும் தோழமையுடன் எம்மிடையே உறவாடியபடியே இருக்கின்றன.

*0*


வியூகம்

இதழ் 05 மார்ச் 2021

பொறுப்பாசிரியர் - உமாவரதராஜன்
umavaratharajan@gmail.com
வடிவமைப்பு - றஷ்மி
amrashmy@gmail.com

VIYOOKAM
Pandiruppu -01
Kalmunai, Sri Lanka

call - 0094772852572
whatsapp - 0094759552572

Bank:
A/C No: 091010002311
HNB Kalmunai




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கத்தி


இரத்தம் இல்லாதவன் நான்
என்னோடு விளையாடினால்
ஆபத்து
இது எனது குணம்
இனிய பழமென்றும் பார்க்கமாட்டேன்
ஏற்றினால் பிளப்பேன்
எனது கவலையெல்லாம் என்னவென்றால்
ஒரு துண்டுகூட
எனக்குத் தின்னமுடியாதே

எனக்கு மனமும் இல்லை
உணவும் இல்லை
நான் உலோகத்தால் உண்டான பிறவி
என்னைப்போல் மனிதர்களிலும் பலர் இருக்கிறார்கள்
பொய்யில்லை
கொட்டிப்பாருங்கள் கருங்கல்லில் தட்டுவதைப்போல்
இருக்கும்

என்னைப் பாவித்து
எவனோ சாப்பிடுகிறான்
இப்போதும்
நான் வெட்டிக்கொடுத்த பழத்தை ஒருவன்
பார்த்திருக்க உண்கின்றான்
எனக்கு கண் இருக்கிறது
அதுதான் இப்போது பளபளக்கிறது

நான் இமையற்ற கண்காரன்
எப்போதும் விழித்தபடிதான்
இருப்பேன்
உறங்குவது விழித்துத்தான்
அப்படி இருந்தும் எலி என்னை நக்குகிறதே
உங்களூரில் மனிதனும் எலிதான்
எலியும் மனிதன்தான்

வீட்டுக்காரன் சில நாளில்
என் பல் உடையத் தீட்டுகிறான்
அவனுக்கு பல் தீட்ட வேறொன்று
எனக்கு கல்
பாவி



எனது செய்கைகளுக்கு பின்னால் எப்போதும்
ஒரு சுயநலக்காரன் இருக்கின்றான்
அவன் எனக்கு இன்னும்
என் கண்ணுக்குத் தெரிவதில்லை
இரத்தம் உள்ளவனாய் இருப்பான்
இதுவரைக்கும் நான் ஒரு பிழையும் செய்யவில்லை
என்னை இவன் செய்யவைத்தான்
நான் மடையன்
அவன் சொன்னபடி கேட்டேன்
இதையும் இவர்களிடம்தான் பழகினேன்

19.09.2020

## மலருக்குள் விழுந்த தவளை

எனது கைக்குள் இருக்கும் நீ
என்னைவிட்டும்
விரல் விரித்து
போய் இவ்வளவு நேரமாகிறதே
அங்கு என்ன செய்கிறாய்
வாசம் இல்லாத மலர் ஒன்று
அந்த ஊரில் இருந்தது
உன்னைப் பாய்ந்து பொத்தி எடுத்து அது
வைத்துக்கொண்டிருக்கிறதா

மலர்களுக்குள் எத்தனைபேர் புதைந்தார்கள்
மலர்கள் மணம் விழுங்கும் கிணறு

மலருக்குள் விழுந்த தவளையைப்போன்று
நீயுமா

நான் வரவா
உன்னை
வாளிவிட்டு எடுக்க

நீ போகும்போது வைத்துவிட்டுப்போன
பெருமூச்சுகள் இருக்கின்றன
தும்பு இல்லாத கயிறு
பெருமூச்சு
மலரின் தண்ணீர்
பழுதாகாது

வீடு வாசலெல்லாம் சுத்தமாய்த்தான் இருக்கின்றன
உன் நடை கொஞ்சநேரம் தூவுப்படாததால்
உணவு இன்றி கொட்டாவி விடுகின்றன
இவற்றின் பசியை உணர்கிறேன்
நீ இனி வேண்டும்

உன் பெருமூச்சின் கயிறுகளை
மரத்தில் ஏறுகின்ற ஒருவனைப்போல
தூக்கி தோளில் போட்டுக்கொண்டு
வெளிக்கிடவா
உன்னை எடுக்க
நீ போகும்போது நமது வானொலி பாடும்
பாடல்களில்
நோண்டி எடுத்துக்கொண்டு போயிருக்கிறாய்
அது விக்கி விக்கிப் பாடுகிறது

26.09.2020


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர் இரணம்

ஒவ்வொரு நாளும் இவ்வாறுதான்
எனக்காக நீ வைத்த நீர் இரணம்
தேநீர்
ஆறிக் குளிர்கிறது
கடைசியில் எடுத்து வீசவேண்டியிருக்கிறது
புதிய நீர் இரணம் தயாரித்து
தரவேண்டியுமிருக்கிறது
நான் இங்கிருக்கும்போது
வேறெங்கோ நுழைவதால்
இந்த ஆள் இப்படித்தான்
என்று நீ என்னை நினைப்பாய்
இந்த ஆள் இப்படித்தான்
இவன் நிலத்தில் இருக்காத
அடி புழுத்தவன்
உன் தொண்டிலும் இறுகாதவன்
எப்போதும் தனக்குள் மின்னல் வெட்டும் ஓர்
உலகத்தான்

இது நீ
இன்னொரு புறம்

தேநீர் குவளை என்ன நினைக்கும்

நான் இவருக்காக காத்திருக்கும் குளம்
காத்திருந்து காத்திருந்தே
ஒவ்வொரு நாளும்
ஆறிப்போன என்னை
இவர் மனைவி
கொட்டிக் கவிழ்ப்பாள்
திரும்பவும் எடுத்து புதுக் குளம் சமைக்கிறாள்
இவர் என்ன பெரிய மகானா
என்றெல்லாம் நினைக்காதா
குளம் நிமிடமும் எதையோ
நினைத்துக்கொண்டிருக்கும்
கடல்
அப்படித்தான் என்றாலும்
மகான்களின் வாழ்க்கையில்
தேநீர் கோப்பைகளும் அழாமல் இல்லை

20.10.2020

## பந்தல்

எழுதுவது
எங்கிருந்தோ எடுத்து
எங்கோ வைப்பது

எங்கோ பூ ஆய்ந்து
எங்கோ கோர்ப்பது

எங்கிருந்து எடுக்கின்றோம்
என்பதுதான் இன்னும் விளக்கமில்லை
நாம் எங்கிருந்து வந்தோம்
என்பதையே கண்டுபிடித்த பிறகும்
இந்தக் குழப்பம் இருக்கிறது

குழப்பத்திற்குள் ஒரு சமாதானம்போல
நமது எழுத்துகள் அமைந்துவிடுகின்றன

எழுத்துகளை எடுத்து நமக்காக
தருவதற்கு
வைத்துக்கொண்டிருப்பது யாரென்று
தெரியவில்லை


அவற்றுள் கருத்துகள் வந்து
மந்திகளைப்போன்று
குந்துகின்றன
அவை மாங்காய் ஆய்ந்து எறியும் ஒவ்வொரு
மாங்காயும்
மனிதர்களின் மனதில் விழவேண்டும்
குறைந்தது அவர்களின் மண்டைகளில் பட்டாவது
ஒரு சொறிச்சலை உணரவேண்டும்
என்பதற்காகவே நானும் எழுதுகிறேன்


கண்ணுக்குத் தெரியாத கடைத்தெருவில்
எழுத்துகளை வாங்குகிறேன்

காகிதத்தில் திருமணம் நடந்து முடிந்ததும்
அவை தம் நிழல்களைத் தந்துவிட்டு
உரிய இடம் சென்றுவிடுகின்றன

எழுதுவதும்
திருமணத்திற்கு
பந்தல் போடுவதும்
பிரிப்பதும் அவிழ்ப்பதுமே

17.11.2020






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிய ஊவத்தல்

- சனவுந்தன்



நீண்டு வளைந்து செல்லும் அந்த நெடிய வீதிதான் எங்களூரின் முதலடையாளம். பஸ் அல்லது வேறு ஏதாவது வாகனத்தில் வந்து மெயின் ரோட்டில் இறங்கினால் மூன்று கிலோ மீட்டர் தூரம் நடந்தேதான் வீடு போய்ச் சேர வேணும். வயலும் வயல் சார்ந்தும், குளமும் குளம் சார்ந்தும் தனிமையாய் நிமிர்ந்து பரந்து நிற்கும் எங்களூருக்கு எப்போதுமே ஒரு தனி கெத்துதான். சிவனொடு மோதிப்பார்க்கத் தயாரான ஹேமநாதன்களால் எப்போதும் எங் களூர் நிரம்பி வழியும். ஆனால் ஊரவனெவனும் பாணபத்திரர்களிடம் தோற்றதேயில்லை.

அம்புலிமாமா கதைகளில் வரும்பூதம் அரச குமாரியின் உயிரை ஒளித்து வைத்த இடம் போல தாமரைப்பூக்கள் நிறைந்திருக்கும் அந்தக் குளமிருக்கும். தீவு போல் எங்கள் கிராமம் தனித்தேயிருப்பது எங்களுக்குப் பெருமைதான்.

பல தடவைகள் இந்த வீதியால் நடந்து போகும்போதும் திரும்பி வரும் போதும், கோடைகாலத்தில் ஒழுதண்ணிக்காக அலையும் போதும் என்னூருடன் ஒரு கோபம் வரும். அது கோபத்தின் உச்சத்தின் எல்லைக் கோட்டைக் கடந்திருக்கும். ஆனால் அது எப்படி மறுகணமே மறைந்து விடுமென்று எவருக்குமே தெரியாது. எங்களூர் வாவியினாலும் வயல்களினாலும் குளங்களினாலும் சூழ்ந்து ஏதுக்குப் புறமாக தனித்தேயிருப்பதால் எங்களுக்கு தனித்துவங்களும் கொஞ்சமிருந்தன.

என்னதான் நகரமயமாக்கலும், நாகரிகமும் வளர்ந்து விட்டாலும் கிராமங்களின் இறுகிய வழக்காறுகளும், பழைமையும் தன் பிள்ளைகளை ஏதோவொரு வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுகக் கட்டிவைத்துக் கொள்ளும். எவ்வளவு தூரம்தான் நாம் சென்றாலும் தொடங்கிய புள்ளிக்கே திரும்பி வர வேண்டும் அல்லது எம்மூச்சின் இறுதியாத்திரை வரை அந்த உணர்வு தொண்டைக் குழிக்குள்ளேயே தேங்கிக்கிடக்கும். மூச்சடங்கப் பாலூற்றும் போதுகூட அது தொண்டையின் அடிக்கோட்டில் தங்கிவிடும்.

ஊரின் முகப்பிலிருந்த புளிய மரம் — அதுதான் புளியடி — முதன்முதலாக இராணுவத்துக்கெதிராக இந்த நாட்டில் தாக்குதலை நடாத்திய எம் ஊரவரின் வீர வரலாறு தொடங்கிய இடம். இந்த வீர வரலாற்றில் களமாடியவர்களில் வேல்முருகு அம்மாச்சி மட்டும்தான் இப்ப வரைக்கும் உயிரோடிருக்கிறார். இன்று வரை இந்தப் புளியமரக் கதைகளை வைத்தே எங்களூரில் வாக்குச் சேகரித்தவர்கள் கனக்கப்பேர். ஆனால் அவர்கள் எவருக்கும் வேல்முருகு அம்மாச்சியைத் தெரியவே தெரியாது. அவரைத் தெரிந்து கொள்வதால் அவர்களுக்கு ஆகப்போவது எதுவுமில்லை. அதில் இன்றுவரை முளைத்த எல்லா அரசியல் காளான்களும் அடக்கம். எங்களூரின் தேவைகளை நிறைவேற்றித் தருவோம் என்று சொல்வதை விட இந்தப் புளிய மரத்தின் கீழ் எங்களூர் மூத்தவர்கள் அடக்குமுறைக்கு எதிராக களமாடிய அந்த வீர காவியத்தை இந்த அரசியல் காளான்கள் உணர்ச்சி பொங்க தம் அரசியல் மேடைகளில் ஏறி வார்த்தை ஜாலங்களைத் தடவி அள்ளித் தெளிக்கும் வீரவசனங்களில் பலரும் அள்ளுண்டு பொன்னான வாக்குகளை இந்த வாய்ச்சொல் வீரர்களுக்கே வாரியிறைத்ததுண்டு. படித்தவர்களும் அதில் அடக்கம்.

சொல்லின் செல்வர் முகாம் மாறி அரசில் அமைச்சர் பதவி வகித்தபோது அந்தப் பதவியைப் பயன்படுத்தி அரசாங்க மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தர எங்கள் ஊருக்கு வருகை தந்தார். அதற்கான கல்நடும் நிகழ்வை என் தந்தைதான் தலைமை தாங்கி நடாத்தி வைத்தார். அந்தக் கூட்டத்திலும் அவர் தன் பழைய தமிழரசுக் கட்சிக்காலத்தில் பேசிய அதே வீராவேசப் பேச்சை தற்போது அவர் ஆடும் ஆட்டத்திற்கேற்ப அழகு தமிழில் அள்ளித் தெளித்து புளியமர வீரசாகசத்தை எங்களூரவரை விட அழகாகக் கோர்வையாக்கி எங்களுக்கே பாடமெடுத்தார். நடுவிலே என் தந்தையைப் பார்த்து "சரவணமுத்து எங்கே அந்தப் புளியமரம்" என்றொரு கேள்வியை வேறு கேட்டுத் தொலைத்தார். அது சூறாவளியில் விழுந்த கதையைச் சொல்லிச் சமாளித்தாரென் தந்தை.

அந்தப் புளியமர வீரத்தாக்குதலால் எங்களூர் எப்படியோ வீரம்நிறை விளை நிலமாக தமிழத் தேசியப் போராட்டத்தில் குழுத் தலைமைகளின் கண்களுக்குத் தெரிந்திருந்தது.

நாங்கள் முன்னமென்றால் ஸ்கூல் விட்டு வந்து நீலாவணைச் சந்தியில் பஸ்ஸால் இறங்கினால் ஊருக்கு நடந்தே போய்ச் சேர வேண்டுமென்ற கொடுமையை நினைத்து, யாரும் சைக்கிளில் வரமாட்டார்களா அவர்களிடம் அண்ணே! நானும் வாறனண்ணே என்று கெஞ்சி தொற்றிக் கொள்வோம். எங்களுக்கு அது ஒரு பரீட்சை மாதிரி. அநேகமாக எனக்கே வெற்றி வாய்ப்புகள் கிடைக்கும். வாத்தியாரின் மகனென்ற அடையாளமும் அப்பாவின் கூத்தில் ஒரு பாத்திரத்தில் தானும் எப்படியாவது ஆடிவிட வேண்டுமென்ற மும்முர வெறியில் வெற்றி பெற விரும்பும் ஒருவராக அந்த சைக்கிள்காரர் கட்டாயமாக இருப்பார். ஒரு தடவை அப்பாவின் கூத்தொன்றில் கட்டியகாரனுக்கு ஆடிய ராமக்குட்டி அண்ணன் என்னை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போகும் போது அப்பாவின் அடுத்த ராமநாடக கூத்தரங்கேற்றத்தில் எப்படியாவது சூர்ப்பனகை பாத்திரத்தை வாங்கித்தர வேண்டுமென்று நிபந்தனை விதித்திருந்தார். சைக்கிளில் தொற்றிக் கொள்ளும் இந்தப் போட்டியில் எனக்கும் நேசமணி மாமியின் மகன் தயாவுக்கும் தங்கநாயகம் மாமியின் மகன் சபேசனுக்கும்தான் கடுமையான போட்டி. கோடைகாலத்தில் குளங்கள் வற்றிவிடும் போது பலதடவைகள் ஆமாங்குளத்துக்குள்ளால் உளுபட்டு குறுக்கு வழியால் வீட்டுக்கு நடந்து வந்ததுண்டு.

உயர்தர படிப்பை நான் முடித்த போது பல்கலைக்கழகம் செல்வேனா இல்லையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத புள்ளிகள்தான் எனக்குக் கிடைத்தன. காத்திருப்பதா தொடர்ந்து படிப்பதா என்பதைத் தீர்மானிப்பதற்குள் விடுதலைப் போராட்டம் தலைகாட்டி விட்டது. என் சிறுபராயத்தைக் கவ்விய இந்தக் காலத்தில் எல்லா ஊர்களிலுமிருந்து சாரை சாரையாக என் வயதுப் பொடியன்கள் காணாமல் போய்க் கொண்டிருந்தார்கள் எங்களூரைத் தவிர.

இப்போதெல்லாம் நாங்கள் யாரும் நீலாவணைச் சந்தியில் பஸ்ஸால் வந்து இறங்கியதும் சைக்கிளுக்காகக் காத்திருப்பதேயில்லை. வேகவேகமாக நடையைக் கட்டி விடுவோம். எப்போது சி.ஜி.எஃப். ஜீப்புகள் அந்த இடத்தால் கடக்கும் என்று தெரியாது கடக்கும் போது அந்த இடத்தில் நிற்பதைப் போல எமகண்டம் எதுவுமில்லை. யாரும் நின்றால் தூக்கிப் போட்டுக் கொண்டு போய்விடுவார்கள் என்ற பயம் உச்சத்திலிருந்தது. போன கிழமை கூட ராசையா றைவரின் மகன் லோகு அவனுடைய தங்கச்சி புஸ்பாவ ஏற்றிக் கொண்டு திரும்பக் காத்துக் கொண்டு நின்றிருக்கிறான். ஆனால் அதற்குள் அந்தப் பக்கம் வந்த சி.ஜி.எஃப். ஆளைத் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். லோகுவைக் கடந்து போன ஜீப் சடாரென பிறேக் போட்டு றிவேஸில் வந்து ஆளைத் தூக்கியதாகச் சொன்னார்கள். ஜீப்பின் உள்ளே சாக்கால் மூடப் பட்டிருந்த முண்டம்தான் தலையாட்டி லோகுவக் காட்டியதாக பலரும் சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாங்கள் யாரும் நீலாவணைச் சந்தியில் பஸ்ஸால் வந்து இறங்கியதும் சைக்கிளுக்காகக் காத்திருப்பதேயில்லை. வேகவேகமாக நடையைக் கட்டி விடுவோம். எப்போது சி.ஜி.எஃப். ஜீப்புகள் அந்த இடத்தால் கடக்கும் என்று தெரியாது கடக்கும் போது அந்த இடத்தில் நிற்பதைப் போல எமகண்டம் எதுவுமில்லை. யாரும் நின்றால் தூக்கிப் போட்டுக் கொண்டு போய்விடுவார்கள்**

சாக்கால் மூடப் பட்ட அந்த முண்டம் காரைதீவில் வைத்து போன கிழமை பிடிபட்ட ஜெயக்குமார்தானாம் என்று லோகுவின் தம்பி மக்கி மகேந்திரன் சொன்னான். அந்தப் பேரைக் கேட்டதும் எங்கள் குறாப்புக்கு பயங்கர கிலிபிடித்து விட்டது. நாங்கள் சிவானந்தா ஹொஸ்ரலில் இருந்து படிக்கும் போது எங்களுக்கு ஒரு வருடம் முந்திப்படித்தவன். ஹொஸ்ரலில் சாப்பாடு பகிரும் போது அந்தக் குழம்பு வாளியில் இருந்து குழம்பு பரிமாறும்போது நாங்க அடியால் எடுத்து வையென்றால் அவன் மேலால் ஒப்புக்கு கரண்டியை ஆட்டிப்போட்டு வைப்பான். அதனால் அவனைப் பற்றி கரியால கக்கூஸ் சுவரில் ஒக்கோஸ் மன்னன் ஜெயக்குமார் என்று எழுதி வைத்தோம். அப்போதே அவன் எங்களில் கொலைவெறியில் இருந்தான். நாலைந்து வருடம் கடந்தும் அந்தக் கோபம் மாறியதாகத் தெரியவில்லை. அந்தக் கோபத்தை இப்போது காட்டி விடுவானோ என்று பயந்தோம். ஆனால் லோகு சிவானந்தாவில் படிக்கவில்லையே. சென்றல் கேம்பில் வைத்து சிகரட் வேனை இயக்கப் பொடியன்களுடன் சேர்ந்து லோகுவும் கொள்ளைய —டித்தவனாம் என்று மோட்சன் சொன்னான். எது எப்படியோ கக்கூஸ் சுவரில் எழுதிய மோட்சன் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தான்.

எங்கள் அப்பா ஒரு பத்திரிகைப் பிரியர். எல்லாப் பத்திரிகைகளும் எங்கள் வீட்டிற்கு காலையிலேயே வந்து விடும். எம்.டி.குணசேனா நிறுவன தினபதியும் அதன் வாரவெளியீடு சிந்தாமணியும் தான் எங்களுக்கு பிடித்தமான பேப்பர்கள். தினபதிப் பேப்பரில் வரும் கவிதாமண்டலம் பகுதியில் எனக்கு படிப்பித்த நீலாவணை சின்னத்துரை ஐயாவின் கவிதையும் எங்களூர் ஜீவரெத்தினம் ஐயாவின் கவிதையும் அடிக்கடி வரும். துறையூர் சரவணன் என்ற பெயரில் அப்பா எழுதும் கவிதையும் அவ்வப்போது வரும். அதிலும் ஞாயிறு சிந்தாமணி பேப்பரில் வரும் அந்த அரசியல் கட்டுரையைப் படிப்பதில் ஒரு அலாதிப்பிரியம். காண்டீபம் என்ற அந்தப் பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் அமிர்தலிங்கத்தாரையும் எஸ்.டீ.சிவநாயகத்தார் கிழிகிழி எனக் கிழித்து போட்டுத் தாக்கியிருப்பார். அந்தக் கட்டுரைகளைத்தான் அப்பாவும் நாங்களும் விரும்பி வாசிப்போம்.

ஒரு நாள் தினகரன் பத்திரிகையின் ஏழாம் பக்கத்தில் ஆசிரிய வேலைக்கு ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம் வெளியாகியிருந்தது. விண்ணப்பிப்பதா இல்லையா என்ற போராட்டம் மனதுக்குள் பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டால் வேலைக்குப் போக முடியாது. இப்போதுதானே பதினெட்டு வயது. அதற்குள் வேலைக்கு என்ன அவசரம் அப்படியில்லை. சின்னவயதில் வேலைக்குப் போனால் நல்லதுதானே. இப்படி மனதுக்குள் கேள்வியும் பதிலுமாக ஒரு தொடரோட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

எதற்கும் ரீச்சிங்குக்கு அப்ளை பண்ணுவம் விருப்பமெண்டாப் போற இல்லாட்டி கம்பஸ் வந்தா கம்பஸுக்குப் போற. இப்ப நாடு போற போக்கில ஒரு அரசாங்க உத்தியோகத்தில சேருவதுதான் சேவ்ப்டி அதோட ஆசிரியத் தொழில்தான் யோக்கியமான தொழிலென்பது அப்பா அக்கா ஆகியோரின் ஏகோபித்த அபிப்பிராயம். அவர்கள் தங்களது பதவிகளை உசத்தி என்றுதானே சொல்லுவார்கள். ஆனால் அப்பாவின் சிந்தனை வேறு திக்கில் போனது அவருக்கு என்மீது ஒரு பயமிருந்தது. நான் அடிக்கடி நியாயத்துக்காக உணர்ச்சி வசப்படுவது ஏதும் தவறு நடந்தால் தட்டிக்கேட்பது போன்ற (நல்ல) குணங்களை வைத்து அவர் ஒரு கணக்குப் போட்டு வைத்ததைப் போல் தோன்றியது. ஊரெல்லாம் இளைஞர்கள் சாரை சாரையாக இயக்கத்தில் சேருவதைப்போல திடீரென நானும் ஒருநாள் காணாமல் போய் விடுவேனோ என்ற அச்சம் மிகுதியாகவே அவரிடம் இருந்தது அதனால் ரீச்சிங்குக்கு அப்ளை பண்ணுமாறு கட்டாயப்படுத்தினார். அதற்கான அப்ளிகேசன் போமும் வந்து சேர்ந்தது. அண்ணனும் நானும் ஒன்றாகவே விண்ணப்பித்தோம்.

ரீச்சிங் அப்ளை பண்ணி ரெண்டு மாதத்தில் பரீட்சை நடந்து சிலமாதங்களின் பின் நியமனமும் கிடைத்து விட்டது. அதுவும் அண்ணனுக்கும் தம்பிக்கும் ஒன்றாகக் கிடைத்ததில் வீட்டில் அலாதி சந்தோசம். ஆனால் கம்பஸ் பற்றிய முடிவு தெரியவில்லை கிடைக்குமோ கிடைக்காதோ என்ற சந்தேகத்தில் ஆசிரியப்பணியே அறப்பணி அதற்கே உன்னை அர்ப்பணி என்ற பெற்றோரின் மனத்திருப்தியோடு முதல் நியமனம் கிடைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாகலுக்குப் பயணிக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். அண்ணன் ரத்தினபுரிக்குப் போக ஆயத்தமானான்.

சி.ஜி.எஃப். கெடுபிடிகளும் பெடியன்களின் நடமாட்டமும் மெது மெதுவாக அதிகரிக்கத் தொடங்கியது. கைதுகளும். காணாமல் போதல்களும் கூடிக்கொண்டேயிருந்தன. சில ஊர்கள் சுற்றி வளைக்கப்பட்டு இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் முகாம்களுக்கு கொண்டு செல்லப்படுவது அவ்வப்போது சாதாரணமாக நடந்தேறியது. சில புதிய சொற்களின் பிரயோகம் எமக்கு அறிமுகமாகி பின் அன்றாடம் பிரயோகிக்கும் சொற்களாக மாறத்தொடங்கின. ரவுண்டப், பூஸா, பங்கர், கண்ணிவெடி, கிறனைற், ஏகே, எம் 16, லோஞ்சர், சக்க, எஸ் எல் ஆர், பிஸ்டல், இப்படி இத்தியாதிகள். அடையாள அட்டை தினமோதும் தோத்திர மாலைப் புத்தகம் போல் அடிக்கடி தடவிப்பார்த்து கவனமாகப் பேண வேண்டிய அதிமுக்கிய பொருளாகி விட்டது.

குருநாகலுக்கு செல்வதற்கு வகை தெரியவில்லை. முன்பின் பயணப்படாத இடம். சிங்களமும் முழுசாக பேசவராது. சில வசனங்கள் மாத்திரம் விளங்கும். ஜெகதீஸ்வரனாக்களின் வீட்டில் தங்கியிருந்து மகா வித்தியாலயத்தில் படிப்பித்த சிங்கள ரீச்சர் யசவதியிடம் மூணுமாதம் படித்த கொஞ்சச் சிங்களத்தை வைத்து எப்படி சமாளிப்பது.


மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 550 வாத்திமாருக்கும் வெளி மாவட்டத்தில்தானாம் நியமனம். சரி எல்லாரும் போய்த்தானே ஆக வேணும். நாமென்ன விதிவிலக்கா எப்டியாவது போய்ச் சேர்வோம் என்று எனக்குத் தெரிந்த ஒரு முஸ்லிம் பையனின் நண்பனது குருநாகல் விலாசத்தைப் பெற்றுக் —கொண்டேன். எனக்கு உதவி செய்யுமாறு தன் நண்பனுக்கு அவன் ஒரு கடிதமும் தந்திருந்தான்.

ஒரு ஞாயிறு காலை. உதயதேவி 6.30க்கு ஊ..ஊ..ஊ.. என்ற நீண்ட ஹோாண் சத்தத்துடன் மட்டக்களப்பு புகையிரத நிலைய மேடையிலிருந்து பெருமூச்சுடன் கள்ளியங்காட்டு நெல் ஸ்ரோர் ஓரமாக மெதுவாக வளைந்து கொழும்பை நோக்கி ஊரத் தொடங்கியது. கொழும்புத் திட்டத்தில் கனடா நாடு கொடுத்த அந்தப் பழைய எஞ்சின் வளைவில் திரும்பும்போது தெரிந்தது. 'ONTARIO என்று ஆங்கிலத்தில் அதில் எழுதியிருந்தது. அது ஊர்ந்து செல்வதைப் பார்க்கும் போது எங்களூர் வண்டிக்கார நாகேசரும் அவரின் தவிட்டுக்கலர் மாடுகள் பூட்டின மாட்டு வண்டிலும் நெல்லுச் சாக்குகளை ஏற்றியவாறு உப்புத்தண்ணிக் கட்டால் ஊர்ந்துவரும் அந்த பரிதாபமான பயணம்தான் ஞாபகத்துக்கு வந்தது.

திமு திமுவென்று ஒரே சனங்கள் கூடுதலாக புதுவாத்திமார்களால் தேர்ட் கிளாஸ் பெட்டிகள் முற்றாக நிரம்பியிருந்தன. அத்துடன் காட்டுப்பச்சை புள்ளிச் சீருடையணிந்த அதிகமான சி.ஜி. எஃப். மாரும் விடுமுறையில் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களைத் தவிர வேறுயாரினது நடமாட்டத்தையும் றெயின் பெட்டிகளுக்குள் காணவில்லை. ஒரே வயதுடைய வாட்டசாட்டமான இளசுகள் அதிகமாகப் பயணிப்பது அவர்களின் கண்களை உறுத்தியிருக்க வேண்டும் ஒவ்வொரு பெட்டிகளையும் நோட்டமிடத் தொடங்கினர்.

ஓட்டமாவடி பாலம் கடந்து கடதாசி நகரத்தைத் தாண்டி எஞ்சின் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. இரண்டு பக்கமும் மனித சஞ்சாரமில்லாத காட்டுப்பகுதிக்குள் ஊடறுத்து றெயின் ஓடிக் கொண்டிருந்தது. எங்களுக்கு எதிர்த்திசையில் மரங்களும் றெயினுக்கு இணையான வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தன. இப்போது ஒவ்வொரு பெட்டியாக சி.ஜி.எஃப். செக் பண்ணத் தொடங்கினார்கள். நாங்கள் சாரை சாரையாக எங்கள் பெட்டி படுக்கைகளுடன் கடைசியில் இருக்கும் கார்ட்பெட்டிக்கும் அதனோடிணைந்த பெட்டிக்கும் அழைத்துச் செல்லப்படுகிறோம். நாங்கள் நேர்த்தியாக அழகாக உடையணிந்து வெளிக்கிட்டிருந்தாலும் அரசாங்க உத்தியோ —கத்துக்குப் போகின்றவர்கள் என்றாலும் தமிழர்கள் என்ற ஆகக்குறைந்த தகுதி நாங்கள் அழைத்துச் செல்லப்படுவதற்கு அவர்களுக்குப் போதுமான காரணமாக இருந்தது.

நான், வன்னியசிங்கம், சகஸ்ரநாமம், ரவி, மனோகரன் கிட்டத்தட்ட முப்பது



சி.ஜி.எஃப். கெடுபிடிகளும் பெடியன்களின் நடமாட்டமும் மெது மெதுவாக அதிகரிக்கத் தொடங்கியது. கைதுகளும். காணாமல் போதல்களும் கூடிக்கொண்டே இருந்தன. சில ஊர்கள் சுற்றி வளைக்கப்பட்டு இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் முகாம்களுக்கு கொண்டு செல்லப்படுவது அவ்வப்போது சாதாரணமாக நடந்தேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரளவு இருப்போம். எல்லாப் புது வாத்திமாரையும் வரிசையில் நிற்பாட்டி வைத்திருக்கிறார்கள். தோள்பட்டையில் பல நட்சத்திர சின்னங்கள் பதித்த அதிகாரிகள் மூவர் அமர்ந்திருக்கிறார்கள். எங்களைச்சுற்றி பத்துப்பதினைந்து சீருடைக்காரர்கள் தங்கள் எம்16 துப்பாக்கிகளை நீட்டியபடி நிற்கிறார்கள். சின்னவயசில் வேலைக்குப் போகும் பெருமை முளையிலேயே கருகிவிடுமோவென்ற மரண பயம் எனக்குள் படரத் தொடங்கியது. கட்டித் தூக்குதல், பூஸா போன்ற சொற்கள் இப்போது அழுத்தமாக நினைவுக்கு வந்தன. எனது புதிய சேட்டும் ட்ரௌசரும் பயத்தில் பெருக்கெடுத்த வியர்வையால் நனைந்து போயின. கால்கள் தடதடவென நடுங்கிக் கொண்டிருந்தன.

பலஸ்தீனிய இளைஞர்களை எழுமானமாகக் கொல்பவர்களால் பயிற்றுக்கவிக்கப்பட்ட ஒவ்வொருவரையும் பார்க்கும் போது குருவுக்கு மிஞ்சிய சிஷ்யர்களைப் போல் கொடூரமாகத் தெரிந்தனர். என்கண்களுக்குள் நான் கேள்விப்பட்ட அத்தனை தெய்வங்களும் வந்துபோயினர். மரண வாசலில் நிற்பவனின் இறுதி மூச்சு மாதிரி என்மூச்சு வெக்கையுடன் வேகமாக வெளிவந்தது. எனக்கு முன்னால் போனவர்களிடம் சிங்களத்தில் கேள்விகள் கேட்கப்படுகின்றன. மொழிபுரியாத அவர்கள் எதுவும்பேசாது முழித்தபடி நிற்கின்றனர். வன்மத்துடன் துப்பாக்கிப் பிடியால் தாக்கப்படுகிறார்கள். வன்னியசிங்கத்தின் தலையை மடக்கி தொடைகளுக்கிடையில் அமத்தி வைத்துக் கொண்டு இரண்டு கைகளையும் சங்கிலிப்பின்னல் போல் பின்னி மூர்க்கத்தனமாக படையினன் ஒருவன் அவனின் முதுகில் நான்கைந்து தடவைகள் ஓங்கிக் குத்துகிறான். வன்னிக்கு மூச்சு அடைத்து விட்டது போலும். மூச்செடுக்கத் திணறிய படி சுருண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்தான். ஏனெதற்கென்று தெரியாது தமிழனென்பதற்காய் அடிகள் விழுந்து கொண்டிருந்தன. வரிசை நகர நகர என்னுடைய முறை வந்தது.என்னுடல் எதையும் தாங்கும் சக்தியற்று தளர்ந்து போய் நா வறளத்தொடங்கியது.

எனக்கு நேற்றுவரையான நினைவுகள் கண்முன் தோன்றி நிழலாடியது. நான் ஊரிலிருந்து கிளம்புவதற்கு இரண்டு கிழமைகளுக்கு முன்னர் ஒரு பத்துப்பதினைந்து இயக்கப் பொடியன்கள் ஊருக்குள்ள வந்து நிற்கிறான்கள். ஊரெல்லாம் ஒரே அல்லோல கல்லோலம். ஒவ்வொரு நாளும் ஊரார்களிடம் சாப்பாட்டுப்பார்சல் சேகரித்து அவர்களுக்கு கொண்டு போய்க் கொடுப்பது ஊரிலுள்ள சில அல்லக்கைகளின் முக்கிய வேலை. வசதியான குடும்பத்தாரிடமிருந்து பார்சல்கள் சென்று கொண்டிருந்தன. அவர்கள் குறிப்பிடும் கறிகள் மட்டுமே பார்சலுக்குள் இருக்க வேண்டும். ஆடு அல்லது கோழியிறைச்சிக் குழம்பு மீன் பொரியல் இரண்டு மரக்கறிகள் அவித்த முட்டை இறால் சொதி இரண்டு வாழைப்பழம். இந்த அடுக்கில் குறிப்பிட்ட வீடுகளிலிருந்து பார்சல்கள் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் மூன்று நேரமும் சென்றன.

ஊரிலுள்ள பதினேழு வயதுக்கும் முப்பது வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள் இயக்கத்தினரால் துப்பாக்கி முனையில் மகாவித்தியாலய வளவிற்குள் இரவு ஏழு மணிக்கு கூட்டத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டனர். பலர் பயத்தினாலும் பலர் எவ்வித அறிவின்றியும் கலந்து கொண்டனர். அவர்கள் படித்தவர்களின் வருகையையே கூடுதலாக எதிர்பார்த்தது போலிருந்தது. சோசலிசம், தமிழீழம், அடக்குமுறை, விடுதலை, ஏகாதிபத்தியம், மேலாண்மை, ஆயுதப்பயிற்சி, இனஅழிப்பு, ஆண்டபரம்பரை, ஏ.கே.47, மெஷின் கண், மூத்தகுடியினர் போன்ற இன்னோரன்ன பலவார்த்தைகளை தேனொழுக லாவகமாகவும் சுவையாகவும் இனிதாகவும் அழகு தமிழுடன் கலந்து பிசைந்து ஒவ்வொருவரும் ஊட்டிக் கொண்டிருந்தனர். ஒருவன் தன்பெயர் ஜெகன் என்றான். அவன்தான் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான். அவர்களுக்கெல்லாம் பெரியவனாக இருக்கக் கூடும். இன்னொருவன் ஜோர்ஜ் என்றான். மற்றவன் பக்தன் என்றான். அடுத்தவன் ஞானி என்றான். ஆகத்தொங்கலில் இருந்தவன் ஜீ ரீ ஆர் என்றான். ஏதும் புதிய துவக்குகளின் பெயராயிருக்குமென்று எண்ணிக்கொண்டேன். ஒருவன் பீ எல் ஓ ட்றெயினிங் என்றான். மற்றவன் தான் யூ பீ ட்றெயினிங் என்றான். இன்னும் என்னென்னவோ பெயரெல்லாம் சொன்னார்கள். அந்த ஜெகன் என்பவன் மட்டும் எல்லோருக்குள்ளும் சிலபடிகள் உயர்ந்து தெரிந்தான். அவர்கள் தம்வசம் வைத்திருந்த ஆயுதங்களை இடைக்கிடையே கழற்றிப் பூட்டிக் காண்பித்தனர். கிட்டத்தட்ட பத்து மணிவரை இந்தப் பாடத்திட்டம் நீடித்து ஓய்ந்தது. தம்முடன் இணையும்படி இறுதியில் தேனொழுகக் கேட்டனர். ம்ஹூம்... யாரும் அவர்களுடன் சேர்வதாக இல்லை. கடைசியில் எங்கள் புளியடியும் எமது கிராமத்து முன்னோர்களின் சாகசங்களும் மறுபடியும் ஞாபகமூட்டப் பட்டன. இந்த வகுப்பு அன்றுடன் முடியவில்லை.மூன்று நாட்கள் தொடர்ந்தன. ஒரு குருவியும் அவர்கள் பக்கம் போவதாக இல்லை. "பளார்" என்றொரு அறைவிழுந்த சத்தம் கேட்டது மனோகரனின் கன்னத்தில் விரல்களின் தடமிருந்தது. அந்த அறையுடன் நான் நினைவிலிருந்து விடைபெற்று நிகழ்காலத்துக்கு வந்தேன். றெயின் புணாணை ஸ்ரேசன் தாண்டிப் போய்க்கொண்டிருந்தது.

நாங்களெல்லோரும் போட்டிப்பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்து இந்த நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு பங்களிக்க நாடெங்கிலும் பயணிக்கும் கனவில் றெயின் ஏறியவர்கள். இப்போது அறுவைக்குப் போகும் ஆடுகள் போல் ஆகி அடிவாங்கிக் கொண்டிருக்கிறோம்.

எனது முறை வந்தது. என்னை ஒரு அதிகாரி முறைத்துப் பார்த்தார். நான் அணிந்திருந்த மடிப்புக்குலையாத நீளக்கை வெள்ளை சேட்டும் கருநீல ட்ரௌசரும் காலில் அணிந்திருந்த விலையுயர்ந்த மொக்காசினோ ஷூவும் ஒரு சிறிய மூக்குக்கண்ணாடியும் மீசைமுளைக்காத முகமும் என்மீதான அவனின் எண்ணத்தை மாற்றியிருக்குமோ என்றொரு நப்பாசை எனக்கு.

"நம மொக்கத" என்றார்.
"மகே நம முரளி சேர்"
"ஒயா கொகெத யன்னே"
"குருநாகல சேர்"
"எய் ஒயா குருநாகலட்ட யன்னே"
"மம அலுத் குருவரயா சேர். மட்ட குருநாகல டிஸ்றிக் லபா தீ அத்த சேர் தின் மம எத்தனட்ட யனவா சேர்"
"கோ ஒயாகே அப்பொயின்ற்மன்ற் லியும்"
நான் சிங்களத்திலிருந்த எனது நியமனக் கடிதத்தை எடுத்துக் கொடுத்தேன். பொறுமையாக வாசித்தார் அந்த அதிகாரி.
"ஒகொல்லங் ஒக்கமே அலுத் குருவராயத?"
"ஒவ் சேர்"
"ஒகொல்லங் ஒக்கமே குருநாகலட்ட யனவாத?"
"நே சேர் அபி ஹம டிஸ்திறிக்கே யனவா சேர்"

இன்னும் பல கேள்விகள். ஒரு மாதிரி தட்டுத்தடுமாறிப் பதிலளித்தேன். சிங்களம் எப்படித் தெரியுமென்று இடையிலே அவர் கேட்டார். நான் யசவதி ரீச்சரின் கதையைச் சொன்னேன். யசவதிரீச்சர் தெய்வமாக மனக்கண்முன் தோன்றினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் நீண்ட விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டோம். எல்லோரும் விடுபடும் போது றெயின் தனக்கு முன்பக்கமிருந்த எஞ்சினைக் கழற்றி பின்பக்கம் மாட்டிக் கொண்டிருந்தது.

ஒரு வழியாக குருநாகலுக்குப் போய் அந்த நண்பன் தந்த விலாசத்திலிருந்த கடையில் தங்கி மறுநாள் காலை குருநாகல் கல்விக் கந்தோருக்குப் போனபோது உங்களுடைய பெயர் லிஸ்ற் கல்வி அமைச்சிலிருந்து இன்னும் இங்கு வரவில்லை அடுத்த திங்கட்கிழமை தான் வரும் அன்று வாருங்கள் என்று ஒரு அதிகாரி எங்கள் எல்லோரையும் நிறுத்தி வைத்துப் பதில் சொன்னார். என்ன சோதனை இது ! மறுபடியும் ஆரம்பத்திலிருந்தா என மனம் நொந்து வாழ்க்கையே வெறுத்தது. வேறு வழியில்லாமல் அடுத்த றெயினில் ஏறி ஊர் திரும்பியாயிற்று.

புதிய கனவுகளோடு சென்ற பொது தெரியாத ட்ரவலிங் பேக்கின் சுமை ஊருக்குத் திரும்பும் போது பன்மடங்காகிக் கனப்பது போலிருந்தது. என்னைக் கண்டதும் அம்மாவுக்கு பயமும் அழுகையும் இரண்டறக் கலந்து வந்தது. இந்த ஊர்கிடக்கிற கிடைக்குள்ள ஏன் மனே திரும்பி வந்தாய் அம்மாவின் ஓலத்தில் நியாயமிருந்தது. அப்பா எதையும் வெளிக்காட்டா விட்டாலும் முகத்தின் இறுக்கம் குறையவில்லை. அது கோபமா இல்லை அடுத்த நகர்வு என்ன என்ற பலமான யோசனையா எனத் தெரியவில்லை. இன்னும் ஜெகன்கள் ஊரில்தான் நிற்கிறார்கள் என்பதை என் பெற்றோரின் பயம் எனக்கு எடுத்துரைத்தது. என்ன செய்வது என்றறியாமல் மண்டை குழம்பிக் கொண்டிருந்தது.

அடுத்த ஞாயிறு எப்படிப் போவது எங்கே தங்குவது அந்த றெயினிலும் சி.ஜி.எஃப். லீவுக்குப் போக வருவார்களே அடுத்த கிழமையும் கல்விக் கந்தோருக்கு லிஸ்ற் வராட்டி..... சரி எனக்குத்தான்

**என்னை ஒரு அதிகாரி முறைத்துப் பார்த்தார். நான் அணிந்திருந்த மடிப்புக் குலையாத நீளக்கை வெள்ளை சேட்டும் கருநீல ட்ரௌசரும் காலில் அணிந்திருந்த விலையுயர்ந்த மொக்காசினோ ஷூவும் ஒரு சிறிய கண்ணாடியும் மீசை முளைக்காத முகமும் என்மீதான அவனின் எண்ணத்தை மாற்றியிருக்குமோ என்றொரு நப்பாசை எனக்கு**

நியமனம் கிடைத்து விட்டதே இந்த ஞாயிறு போகாமல் அடுத்த நாள் திங்கள் கிழமை குருநாகல் கல்விக் கந்தோருக்கு ஒரு ரெலிபோன் பண்ணிக் கேட்டால் லிஸ்ற் வந்ததும் வராததும் தெரியப் போகுது. வந்திற்றெண்டால் செவ்வாய்க்கிழமை றெயினில போனா அது பன்னிரெண்டு மணிக்கு குருநாகலுக்கு போயிரும் அப்படியே நேரா கல்விக் கந்தோருக்குப் போய் அலுவல முடிச்சிற்று புதிய ஸ்கூலுக்குப் போயிரலாம். இதுதான் பிளான்.

திங்கள்கிழமை காலை எட்டரை மணிக்கு ஊர் போஸ்ற் ஒப்பீஸுக்குப் போய் போஸ்ற் மாஸ்ரர் பத்மாவிடம் குருநாகலுக்கு ஒரு போண் பண்ணவேணும் என்றேன்.

ஒரு கிழமையா ரெலிபோன் வயர் அறுந்து கிடக்குது போன் அவுட் ஒப் ஓடர் மெயின் றோட்டுக்குப் போய் நீலாவணைப் போஸ்ற் ஒப்பீஸில எடுங்க என்றாள் பத்மாக்கா. மெயின் றோட்பக்கம் போவதென்றால் இப்போதெல்லாம் கொல்களத்துக்கு போகும் மாடுகளின் நிலமைதான் என்பது பத்மாக்காவுக்கும் தெரியாததல்ல. ஒருவிதமாகத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கிளம்பினேன்.

நீலாவணை போஸ்ற் ஒப்பீஸில் ரெலிபோன் பண்ண ஏற்கனவே இரண்டுபேர் வரிசையில் காத்துக் கொண்டு நிற்கிறார்கள் ஒருவர் உள்ளே கதைத்துக் கொண்டிருக்கிறார். முகம் தெரியவில்லை அவரின் முதுகுதான் தெரிந்தது. அடேய் மனிசா கெதியாக்கதச்சி முடிடா இவ்விடத்தில சுணங்கிற ஒவ்வொரு நிமிடமும் நெருப்பில் நிற்பது போன்றது. எந்த நேரமும் சி.ஜி.எஃப். ஜீப் இந்தப்பாதையால் ரோந்துவரலாம் எனக்கான ஆபத்தின் நிகழ்தகவு அதிகமுள்ளது போல் தோன்றியது.ஒரு கட்டத்தில் பொறுமையிழந்தேன் அவனருகே சென்று கெதி பண்ணச் சொல்லலாம் என்று அருகில் சென்றேன் அங்கு நின்றவன் முகம் எனக்கு ஏற்கனவே பரிச்சயமான ஒன்று போலிருந்தது. யார் இவன் எங்கே இவனை ஏற்கனவே கண்டேன். ஞாபகம் வந்து விட்டது. இவன் வேறுயாருமல்ல எங்களூரில் கடந்த இரண்டு வாரமாகத் தங்கியிருக்கும் இயக்க குறூப்பின் தலைவன் ஜெகன்தான் அது. காதைக் கொடுத்தேன் சிங்களத்தில் யாருடனோ போனில் கதைப்பது அரசல்புரசலாக விளங்கியது. எனது சிங்களத்தை விட அவனுடைய சிங்களம் சற்று வீரியம் குறைந்ததுதான். இப்போது காதை நன்றாக விரித்துவைத்து ஒட்டுக்கேட்டேன் அவன் பேசப் பேச எனக்கு பகீரென்றது. என்னைத் தூக்கிவாரிப் போட்டது. ஒருகணம் பூலோகம் சுற்றுவது நின்றுவிட்டது போலிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியும் இருப்பார்களா கண்முன்னே நிகழப்போகும் அகோர மரணங்களுக்கான அழைப்பல்லவா அது. இனியுமிங்கிருப்பது மரணப் பொறிக்குள் தலையை நானே தானாகக் கொடுப்பது மாதிரி. ஊருக்கும் போக முடியாது ஒரேவழி மருதமுனைக்குள் போய் எங்காவது குறுக்கு வீதியிலுள்ள ஒரு மரத்தின் கீழ் நிற்கவேண்டியதுதான்.

நான் அந்த மரத்தின் கீழ் நின்று சைக்கிளை விட்டு இறங்கி ஒரு பத்து நிமிடம் கழிந்திருக்கும். பட பட வென வாணவேடிக்கையில் ஆயிரக்கணக்கான பட்டாசுகள் வெடிப்பது போல் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் வானைப்பிளந்து என் காதுகளைச் செவிடாக்கியது. எங்களூரை சுற்றியவாறு அந்தச் சூட்டுச்சத்தம் கிட்டத்தட்ட ஒருமணித்தியாலயம் வரை நீடித்தது. எங்களூருக்குள் இயக்கம் வந்து நிற்பது கனபேருக்குத் தெரியும் அவர்களின் கதை முடிந்திருக்கும் என்றே பலரும் நினைத்தனர்.

மாலை 4.00 மணிக்குப்பின் எல்லாம் ஓய்ந்து சி.ஜி.எஃப். போய் விட்டதாம் எனத் தகவல் வந்தது. அதன் பின்னர்தான் ஊருக்குக் கிளம்பினேன். அதே நீண்ட வீதி சோபையிழந்து இப்போது மரணவீதியாய்த் தெரிந்தது. ஊரே மரணவீடாகியது போல் வீதியிலாங்காங்கே தாய்மாரின் ஓலம். சந்திக்குச் சந்தி பிணங்கள். ஆற்றில் மிதந்தவைதான் அதிகம். படையினருக்குப் பயந்து ஆற்றுக்குள் பாய்ந்த அத்தனைபேரின் தலைகளும் சிதறியிருந்தன. ஒத்தக்கண் ராமன், அழகரெட்ணம் வாத்தியாரின் மகன் உதயணன், தெறிப்பான் கணபதியாரின் பேரன்... அப்பப்பா பட்டியல் நீண்டு கொண்டே போனது அன்றைக்கு மட்டும் நாற்பது சடலங்கள். இதை விட விசாரணைக்காக அழைத்துச் செல்லப் பட்ட இளைஞர்களின் எண்ணிக்கை நூறளவில் இருக்கும். ஒவ்வொரு வீட்டிலும் ஒப்பாரிச்சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. ஆனால் இயக்கக்காரன் எவனுக்கும் எதுவும் நடக்கவில்லை அவர்கள் அங்கு இருந்தால்தானே எதுவும் நடப்பதற்கு.

சாப்பாட்டுப்பார்சல்கொடுத்தனுப்பிய ஒவ்வொரு தாயும் அந்த சண்டாளர்களுக்காகவும் சேர்த்துக் கண்ணீர் வடித்தார்கள். எனக்கென்றால் கோபம் பொத்துக் கொண்டு வந்தது என்னசெய்வது அடக்கிக் கொள்வதுதான் அப்போதைக்கு ஒரேவழி யாகத் தெரிந்தது.

பிடித்துக் கொண்டு போன 239 பொடியனுகளில் 200 பேருக்கு மேல் விடுதலையாகி வந்தார்கள். மிகுதிப் பேரில் எட்டுப் பேரைத்தவிர அனைவரும் அடுத்த இரண்டு நாட்கள் கழித்து வீட்டுக்கு வந்து விட்டனர் முழுப்பேருக்கும் நல்ல அடி. முகம் கை கால் சூத்தாம்பிட்டி எல்லா இடமும் எஸ்லோன் பைப்பால் அடித்த தடம் பதிந்து வீங்கியிருந்தது.

மறுநாள் விடிந்தது ஒவ்வொரு தினமும் விடியும்போது பயமுட்டைகளைச் சுமந்தே விடிகின்றன. எப்படியாவது இன்று குருநாகல் கல்வித்திணைக்களத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வேண்டும் என்று எண்ணிய படி வாசலுக்கு வெளியே வந்தேன். ஊரில் இன்றும் ஒருவித மயான அமைதி நிலவியது. சந்திக்குச் சந்தி நின்று சில தாய்மார்கள் கலவர உணர்வுடன் கதைத்துக் கொண்டு நின்றனர். நோட்டம் விட்டபின் மகான் போடியாரின் மகள் லெச்சுமியிடம் என்னவென்று விசாரித்தேன். ராவோடராவா நம்மட ஊரில இருந்து முப்பது நாப்பது பொடியனுகளுக்கு மேல இயக்கத்தில சேர்ந்து இந்தியாவுக்கு ட்றெயினிங் எடுக்கப் போயித்தானுகளாம் இன்னமும் போவானுகள் போல. இஞ்ச கெடந்து அடிவாங்கி வெடிபட்டு சாகிறத விட எங்கையெண்டாலும் போய் அவனுகள் உசிரத் தப்பவெச்சாப்போதும் என்று மூச்சுவிடாமல் சொல்லி முடித்தாள்.

அடக்கறுமமே! ரெண்டு கிழமையா எவ்வளவோ தத்துவமெல்லாம் சொல்லி போராட்டத்தப்பற்றி இரவிரவா வகுப்பெடுத்தும் அசராத பொடியனுகள ஒருரெலிபோன்கோளெடுத்துபெரியரணகளத்தையே நடத்தி அந்த இயக்கக்காரன் ஜெகன் சாதிச்சுப் போட்டானே. அவன் முந்தநாள் பெரியநீலாவணப் போஸ்ற் ஒப்பீஸில இருந்து ரெலிபோணில் கதைத்தது எனக்கல்லவா தெரியும்.ஒரு ஒலிநாடா போல் என் மனதில் அந்த உரையாடல் பதிந்து போயிருக்கிறது .

"ஹலோ சி.ஜி.எஃப். மாத்தையாத"

"சேர் மம தொறநீலாவணே இந்தலா விஜயன் கத்தாகறன்னே"
"அப்பே கமட்ட கொடக் கொட்டி அவில்லா இன்னவா சேர்"
"கொடக் இன்னவா சேர். ஹெமதாம ராத்திரி வெலாவட்ட திரஸ்தவாத பந்திய பவத்வனவா சேர்."
"ஒவ் சேர் ஏ.கே 47 வென களுபாட்ட துவக்குவ கொடக் தியனவா சேர்"
"ஒவ் சேர் தாமத் இன்னவா சேர்"
"ஹரி சேர்"

நேற்றைக்கு முந்தின நாள் இந்த நேரத்தில் நடந்த அந்தக் கொடிய நரவேட்டையில் பலியான அப்பாவி இளைஞர்களின் தாய்மார்தான் இந்த ஜெகனுக்கும் அவன் கூட்டத்துக்கும் ஆட்டிறைச்சிக் கறியுடன் கடந்த ஒரு மாசமா சோத்துப்பார்சல் கொடுத்தவர்கள் நானும் அந்த அப்பாவி இளைஞர்களின் ஆவி மட்டும்தான் இதை அறிவோம்.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-றஷ்மி-

63 - 01.

துறைமுகங்கள்தோறும் துருபூக்கத்
தரிக்கும் கப்பல்கள்
துறைகளின் மணலில் ஏறி நிறுத்தப்பட்ட
வள்ளங்களில் கடலின் மணமில்லை
உப்பின் கரிப்பின்றி வலை காயும்
தெளிந்த வானங்களின் கீழிறங்கும் கடற்புட்கள்
கரையின் சங்குகளுள் சாவை ஊதும்காற்று

யாருக்கு வழிசொல்ல மேற்கே வெள்ளிகள்...

o

63 - 02.

விதைப்போடு விடப்பட்ட நிலங்களில்
குருவிகள் குடிபுகும்
பாற்பருவம் மாற
கிளிகள் பெயர்ந்துபோகும்
குலைமுதிர்ந்து கொட்டும்
கழிநிலத்தில் தானியம் தங்கம் மின்னும்
கதிர்கள் உதிர்ந்து பயிரேறும்
மழைபரவி பயிர்சாயும் ஒருகாலம்
உமிபிளந்து மணிஉதிர ஒருகாலம்
நடைகளில் கோரை உயர்ந்து வரம்பழியும்
பன் பூக்கும்
தும்பிகள் ஏறும் இறங்கும்
வாய்க்காலில் மீன்பெருகும்
புரை முன்றல் பயிற்றை நாவல் பூச் சொரியும்
வண்டுகள் இரையும்.
கோடையின் இரண்டும்
மாரியில் ஒன்றும் விதைப்பு தப்பும்

நீண்ட ஓய்வில் நிலம் புண் ஆறிக்கிடக்கும்...

o

63 - 03.

காடு வளர்ந்துவளரும்
மரங்களால் நடந்து கொடிகளால் பரவும்
தனது பச்சைகளால் எல்லையிடும்
கனிகளை உதிர்த்து
பொடிகளாய்ப் பறந்து
காற்றாயும் நீராயும்
ஓட்டியும் உதிர்ந்தும் பரம்பிக்கொள்ளும்
அசாத்திய ஞாபக வலிமையில்
மூதாதை வேர்களை தேடிக்கொள்ளும்

யானை யானையாய் நினைவுகளைச் சேமிக்கும்
காடு...

o

63 - 04.

பாத அடியில் தேங்கி
வழிந்து ஒழுகிவரும் ஈரம்.
முகடில் குளிர் இறங்கித் திணியும்.
யாத்திரிகள் மலையேற்றமில்லை.
தேநீரின் ஆவி கலவாத குளிர்காலை.
போர்வையுள் பரிமாறப்படாதது உடற்சூடு.
மலைக்கான பாதையில்
யாரும் பயணிப்பதில்லை.
தூக்குவிளக்குகள் எரிவதில்லை.
ஒளியேற்றிப் பிரார்த்தித்த பக்தர்களால்
கைவிடப்பட்டான் கடவுள்.
இருளில்-
பாதங்களில் இருந்தும் வெளியேறிப்
பஞ்சசீலங்கள் எரிகின்ற வெளிதாண்டிப்போய்
பதுங்கினான் முனி.
அவன்பேரில் கையகப்பட்ட நிலங்களில்
கல்லாய்ச் சிலையாய்
நிலையிலும் இருக்கையிலும்
சயனித்தும் கிடத்தப்பட்ட
திருவுருக்களைக் கடந்துபோனான்.

அவன்
வாழ மறுக்கப்பட்டான்...


o

63 - 05.

ஒரு உதிர்வுகாலம் முழுதும்
ஒரு பனிக்காலம் முழுதும்
துளிர்விலும்
மலர்விலுமாய் நீளும்
அடைவு.


பருவங்கள் நான்கு.
ஆயிரம் வருடவாழ்வு.

பாலை...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













*1.*

சுமார் 17 ஆண்டுகளுக்குப் பின்னர் வியூகத்தின் 5 வது இதழ் வெளியாகிறது. வியூகம் ஏன் வெளியானது, நடுவில் ஏன் நின்று போனது என்ற கேள்விகளை சிற்றிதழ்களின் தன்மையையும் வரலாறையும் அறிந்தவர்கள் எழுப்ப மாட்டார்கள்.

வயதானவர்களின் குண இயல்பை உதறித் தள்ள முடியாமல் நானும் என் பதின்பருவத்தை இந்தத் தருணத்தில் நினைக்க வேண்டியிருக்கிறது. நம் வாகனம் ஏதோ கோளாறுடன் பின்னால் போய்க் கொண்டிருப்பது போலோர் உணர்வு.

கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு முன்னர் நான் எழுதத்தொடங்கிய சூழலில் எழுத்தாளர்கள் பலரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டோம். படைப்புகள் பற்றி உரையாடினோம். அவை படைப்பு மனோநிலையை மிகவும் ஊக்குவித்து செழுமைப் படுத்தியது. பார்வையைப் பல்கோணங்களுக்கும் பயணப்படுத்தியது. சுயமதிப்பீட்டுக்குத் தூண்டியது. அப்படிக் கூடும்போது சண்டைகள் வந்தனதான். ஆனால் பிரியும் போது மகிழ்ச்சியுடன் 'வெலிகம' ஹோட்டெலில் இஞ்சிப் ப்ளெய்ன் டீ குடித்து விட்டுத்தான் பிரிந்தோம்.

நீலாவணன் தன் வாழ்நாளில் அவருடைய கவிதைத் தொகுப்பை அச்சுருவில் கண்டதில்லை. சண்முகம் சிவலிங்கம் நீண்ட காலத் தயக்கத்தின் பின்னரே தன் கவிதைத் தொகுதியை வெளியிட்டார். இன்று அப்படியல்ல. பெரும்பாலான படைப்பாளிகள் முகநூல்,சமூக வலைத்தளங்கள் வழியாக 'சிகரங்களைத்' தொட்டு அங்கேயே குடியேறி விட்டார்கள். வருடமொரு தொகுதியை வெளியிடாவிட்டால் அதை நோய்க் குறைபாடாகக் கருத இடமுண்டு எனக் கருதுகிறார்கள். (முன்னுரை எழுதுபவர்களைப் பட்டினியுடன் தவிக்க விடலாகாது என்ற மனிதாபிமானமும் காரணமாக இருக்கலாம் ). பார்வையில் தெளிவில்லை. சொல்லும் முறையில் புதுமையில்லை, கவிதைக்குப் பதிலாக 'வஜனங்கள்' எழுதுகிறார்கள். பரிட்சார்த்தமான முயற்சிகள் என்று சொல்லி பிள்ளையாருக்குப் பதிலாக குரங்கு பிடித்துக் காட்டுகிறார்கள். 'பேஷ்..பேஷ்.. பலே..பலே..நைஸ் ... அருமை' என முகஸ்துதி செய்ய ஜால்ராக்களுடன் ஒரு கோஷ்டியைக் கூடவே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். போலி செய்தல், பாவனை செய்தல், பாசாங்கு புரிதல் என அவர்களுடைய காலமும் இவற்றைக் கண்டு கடுப்பாவதில் நம் பொழுதும் கழிகிறது.

நூல் வெளியீட்டு நிகழ்வுகள் என்ற பெயரில்நடப்பது ஒரு வகை அங்காடி வியாபாரம். கூவிக் கூவி அழைத்தால் வாராதிருப்பாரோ? நூலாசிரியன் முகம் ஒரு மில்லி மீற்றர் கூடக்கோணாத வகையில் புகழுரைகள் . இன்னொரு புறம் அஞ்சலி நிகழ்வுகளின் சாட்டில் சுய புகழுரைகள் நடக்கின்றன. உள்ளூர் வேலிகளைக் கூடத் தாண்டாத ஒரு எழுத்தாளரை சர்வதேச எழுத்தாளராக்கி ,அவர் வாய் திறவாமலிருக்க இறுதியில் மூன்றுபிடி மண் போடுகிறார்கள். விருது பெறும் விழாவின் ஈரம் காயும் முன்னரே விருதைப் பெற்றதற்கோர் விழா நடக்கிறது- சாமத்தியச் சடங்கு போல். எழுத்தாளர் பருவமடைந்தது ஊருக்கும் தெரிய வேண்டுமாம். பத்திரிகையில் பொன்னாடையுடனும் விருதுடனும் ஒரு படம், ஒரு செய்தி. 'செத்த வீட்டில் பிணமாகவும், கல்யாண வீட்டில் மாப்பிள்ளையாகவும்' இருக்க விரும்பும் பிரமுகர்களின் தன்முனைப்புத் தனத்துக்கு கொஞ்சம் சொறிந்து கொடுத்தால் 'கழுதை கூட...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன்தானடி. தங்களுக்கு சம்பந்தமில்லாத துறைகள்பற்றி அதற்கு சம்பந்தமில்லாத பலரும் உதிர்க்கும் உளறல்களை அடிக்கடி காண்கிறோம். திருவிழா சமயங்களில் கடை விரித்து, அது நிறைவுற்றதும் கலைந்து செல்லும் இந்தக் கும்பல் இன்னொரு திருவிழாவுக்குக் காத்திருக்கும்.

இவற்றுக்கு அப்பால் இந்தக் குழாம் 'இலக்கியத்துக்கான ஓர் இயக்கமாக 'செயற் பட்டிருக்கின்றதா? நம் மத்தியிலும் அயலிலும் வெளியான முக்கிய நூல்கள் பற்றி ஆரோக்கியமான கலந்துரையாடல்களை முன்னெடுத்ததுண்டா? நவீன தமிழ் இலக்கியத்தின் புதிய திசைகளை, சிந்தனைப் போக்குகளைப் பற்றி உருப்படியான உரையாடல்கள் நிகழ்ந்ததுண்டா? குறும்படங்கள் போன்ற புதிய கலை வடிவங்கள் இன்று இங்கே நுழைந்திருக்கின்றன. உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் பல மொழிகளிலிருந்தும் அருமையான திரைப்படங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன . இவ்வுலகம் சார்ந்து புதிய பல கலைஞர்கள் வியக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவைகளை இவர்களைப் பற்றிய உருப்படியான அறிமுகங்களும் பகிர்தல்களும் நம் சூழலில் நிகழ்ந்துள்ளனவா ?

எதுவுமில்லை. ஒரு அபத்த நாடகத்தைப் போல வெறும் மேடை முழக்கங்கள். அல்லது பட்டிமன்றங்கள்.

மேடைகளில் பச்சை, சிவப்பு என்று பலவர்ண டியூப்லைட்டுகளின் கீழ் நின்று, முகத்தில் வந்து மோதும் பால்பூச்சிகளை விரட்டியபடி, மைக்கை நான்கைந்து தடவைகள் ஊதிப்பார்த்த, கண்ணாடியில் முகம் பார்ப்பதுபோல் தாள் கற்றைகளைப் பார்த்து நம் கவிஞர்கள் கவிதைகள் படித்த காலம் ஒன்றிருந்தது. அவர்கள் பங்கேற்ற கவியரங்குகளை செவி மடுக்கவெனக் கூடிய ரசிகர்களையும், அவர்கள் கவிதை வரிகளுக்குக் கிடைத்த கரவொலிகளையும் அனுபவ பூர்வமாகக் கடந்து வந்தவன் நான்.

சுயமாகப் பாடல்கள் எழுதி, அசலான இசையமைத்த விதவிதமான குரல்களை ஒலிக்க விட்ட எத்தனையோ இசைக்குழுக்கள் அந்தக் காலத்தில் இருந்தன. 1970களில் ஈழத்து மெல்லிசைப் பாடல்கள் என்றொரு வகைமையை நாம் உருவாக்கியிருந்தோம்.

ஆனால் இன்று எங்கள் இசைக்குழுக்கள் தமிழ்நாடு சினிமாவின் நகலிசையைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கும் அவலத்தைக் காணுகின்றோம். நடனம் என வரும் போது தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் இசை இறுவட்டுகளின் இசைக்கு நம் கலைஞர்கள் அபிநயித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம்.

காட்டுச் செடிகள் போல் தானாக முளைத்துத் தானாக வளர்ந்த கலை-இலக்கிய மன்றங்கள் அன்றிருந்தன. மனமும், பணமும்கொண்ட செல்வந்தர்களும், மக்களும் இவற்றைப் போஷித்தார்கள். ஆர்வமும், கலைப்பித்தும் அவர்களை முடுக்கி, இயக்கிக் கொண்டிருந்தன. விருதையோ, பட்டத்தையோ, பொற்கிழியையோ இலாப நஷ்டக் கணக்கையோ, பத்திரிகையின் செய்தியையோ , படத்தையோ எதிர் பார்த்து அவர்கள் இயங்கியதில்லை.

நாம் இன்று பல்வேறு காரணங்களால் சோர்ந்து போயிருக்கலாம். ஆனால் இது மண்ணுடன் பிணைந்த கலைஞர்களின் பூமி. நம்மால் முடியாதது எதுவுமில்லை. மறுபடியும் பொன் ஏர் பூட்டி உழுவோம். 'ஏலேலோ ஐலசா' பாடி நம் தோணியைக் கடலில் விடுவோம்.

0

## 2. புதிர்களின் கதைகள்


சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நண்பர்நௌஷாத்தின் 34 கதைகளைக் கொண்ட 'சொர்க்கபுரி சங்கதி ' சிறுகதைத் தொகுதி வெளியாகியது . நௌஷாத் அந்த நூலுடன் உறங்கு நிலைக்குச் செல்லாமல், படைப்பூக்கத்துடன் இருக்கிறார் என்பதற்கு அத்தாட்சி, 08 கதைகளுடன் அண்மையில் வெளியான'பூச் செண்டு போல் ஒரு மனிதன் ' என்ற இந்தத் தொகுப்பு.

இவை எட்டும் ' சிறுகதைகள்' எனச் சொல்லப் பட்டாலும் கூடப் பெருங்கதைகள் ஆகும். ஒவ்வொரு சிறுகதையும் சராசரி முப்பது பக்கங்களைக் கொண்டவை. ஒற்றைச் சம்பவமோ, ஒற்றைத் தருணமோ தென்படாமல் எண்திசையும் கிளை பரப்பிச் செல்லமுயலும் கதைகள்.

நண்பர் நௌஷாத் வழி வழி வந்த கதை சொல்லல் முறையிலிருந்து விலகி இன்னொரு பாதையைத் தேர்ந்தெடுக்கிறார். மடிப்பு கலையாத சட்டையையோ, பூசி மினுக்கிய தரையையோ அங்கே காணவியலாது. ஒரே மூச்சில் படித்து விட்டு நிமிர்வதோ அல்லது பந்திவிட்டுப் பந்தி பாய்ந்து கடந்து புரிந்து கொள்வதோ இயலாத காரியங்கள். அபரிமிதமான கற்பனைகளாலும், விசித்திரமான நிகழ்வுகளாலும் இழையப் பட்ட அவருடைய படைப்புகளை சுருக்கமாக புதிர்களின் கதைகள் என்று அழைக்கலாம்.

நௌஷாத்துடன் ஒரு சாதாரண வாசகன் சமாந்தரமாகப் பயணிப்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. பல்துறை அறிவு வாசகனுக்கு வாய்க்கப் பெற்றால்அவருடனான கதைப் பயணம் உவப்பானதாக இருக்கும். அவருடைய படைப்புலகத்தின் அடியாழத்தில் ஓடிக் கொண்டிருக்கும் சூட்சும நீரோட்டத்தை உய்த்துணர இலக்கியப் பயிற்சியும் இருக்க வேண்டும். வெறும் ஒற்றையும் தட்டையுமான எழுத்துக்கு மாற்றீடாக இத்தகைய கதைகளைக்கொள்ளலாம். புதிர்த்தன்மையையும், பல பரிமாண புரிதல்களையும்தரும் இத்தகைய படைப்புகள் மாய நதியொன்றின் வசீகரத்துடன் தனது ஆழத்தையும் அகலத்தையும் அறிய வாசகர்களை அழைக்கின்றது. நுனிப்புல் மேய்வது என்ற பேச்சுக்கு நௌஷாத்தின் படைப்புகள் இடமளிப்பதில்லை. பல்துறை சார்ந்த அறிவாலும், தகவல்களாலும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சூழல் பற்றிய கூர்மையான அவதானிப்பாலும் புனைவுகளுக்கு ஒருவித நம்பகத் தன்மையை உருவாக்கிக் கதைகளை அவர் கட்டியெழுப்புகிறார். ஒரு மரம் பற்றிக் கூற வந்தால் அதன் ஆணி வேரிலிருந்து அதில் பூத்துக் குலுங்கும் மலர்கள், அவற்றிலிருந்து வெளிப்படும் மணத்தின் குணாம்சம் எனவிபரித்துக் கொண்டே செல்லும் ஆற்றல் அவருக்கு வாய்த்திருக்கிறது.

உதாரணங்களாக சொல்லக் கூடிய பல இடங்கள் இந்தத் தொகுப்பில் உண்டு.

'ஒரு கிழவன் நடந்து சென்றான்' என்று எழுதி விட்டு அவர் அடுத்த வாக்கியத்துக்குப் போயிருக்கலாம். ஆனால் 'பென்குயின் நடப்பதைப் போல் தள்ளாடும் நடை' என்று சொன்னால்தான் அவருடைய மனம் நிறைகிறது. முதிர்ந்த ஒரு புளியமரத்தைக் குறிப்பிடும் போது 'புளியமரத்துக்குக் கிழடு தட்டியிருக்க வேண்டும். தண்டிலே அவ்வளவு எண்ணிக்கையிலான முடிச்சுகள் இருந்தன' என்கிறார்.

பார்வை மங்கலை இவ்வாறு குறிப்பிடுகிறார் 'ஒரு காலத்தில் என் விழிகள் வெளிச்சத்தால் நிரப்பப் பட்ட ஜன்னல்களாக இருந்தனவே' பியூரி கென்ஸா என்ற ஓவியனைப் பின் வருமாறு அறிமுகம் செய்கிறார். '..... நோய் பீடித்த / அசிங்கமான பூச்சிகளால் சூழப்பட்ட, வெறுக்கக் கூடிய சாம்பல் நிறமான அதிக முடிச்சுகள் காரணமாக அவலட்சணமான ஹெக்பெர்ரி மரத்தையும் விட மிக மோசமாகத் தோற்றமளித்தான். இறந்த பின் எழுந்து நடமாடுபவனாக, மேனி கறுத்தவனாக, விலாவெலும்புகள் துருத்திக் கொண்டிருப்பவனாக, வாய் உலர்ந்து பேச மாட்டாதவனாக வெளிறியவனாக, பற்களில் காவி படிந்தவனாக, கண்களில் சாம்பல் பூத்தவனாக, எண்ணெய் போட்டு வாராத சிக்குப் பிடித்த பரட்டைத் தலையனாக, அருகில் நெருங்க முடியாத வியர்வை நாற்றம் உள்ளவனாக' .... இப்படியாகச் செல்கிறது அந்த அறிமுகம்.

போரின் அலங்கோலத்தையும், அவலத்தையும் எடுத்துச் சொல்லும் அவருடைய வரிகள் இவை. '..... எங்கள் தலைக்கு மேலே குண்டு வீச்சு விமானங்கள் பறந்தன. அவர்கள் என்னுடைய பிறந்த நகரத்தின் மீது குண்டுமாரி பொழிந்தார்கள். வானத்தைத் தொட்டுக் கொண்டிருந்த கட்டிடங்கள் இடிந்து வீழ்ந்தன, பயிர்கள் கருகின, மக்கள் மடிந்து வீழ்ந்தார்கள். நிலம் முற்றிலும் கறுப்பு நிறமாகவும் மலடாகவும் மாறிற்று. நாங்கள் பதுங்கு குழிகளுக்குள் ஓடி ஒளிந்தோம். பதுங்கு குழிகளுக்குள்ளும் எங்களைக் குண்டுகள் பின் தொடர்ந்தன. குண்டுகளுக்குத் தாக்குப் பிடிக்க முடியாத நாங்கள் பதுங்கு குழிகளிலிருந்து வெளியேறி, இரவில் நட்சத்திரங்களைப் பார்த்த படியும், காட்டு விலங்குகளை எதிர்கொண்ட வண்ணமும் ஓடத் தொடங்கினோம்'

லார்வினுக்கும் கோல் பெய்லி கிறீன் என்ற அவனுடைய மனைவிக்கும் உள்ள உறவைப் பற்றிக் குறிப்பிடும் போது 'ஓர் உறையில் இரண்டு வாட்கள் இருந்தால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது .அதாவது எந்த வேளையிலும் தங்களுக்குள் சண்டையிட்டு ஒருவரையொருவர் வெட்டிக் கொல்லத் தயாரான நிலையில் இருந்தார்கள்...' என்கிறார்.

காப்புறுதி முகவர் என்பவர் பற்றி நௌஷாத் எழுதியிருக்கும் வரிகள் இவை . '...காப்புறுதி முகவர் என்பவன் கொஞ்சம் முகவெட்டாக இருப்பதோடு வாடிக்கையாளரை ஈர்க்கும் வகையில் கவர்ச்சியாகப் பேச வேண்டும்.அதை விடவும் ஆடை அணிந்தால் அது மனிதர்களை சுண்டியிழுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டே வந்த நண்பன் முக்கியமாக வாடிக்கையாளருக்கு மாசாலை காட்டி அல்லது ஐம்பமடித்து எங்கள் வலையில் வீழ்த்தி விட வேண்டும்...'

அவருடைய கதைகளில் கூட அபூர்வமான விசித்திரமான பிரச்சினைகள் முன் வைக்கப் படுகின்றன.

மறைந்திருக்கும் உலகக் கிராமங்கள்' என்ற தலைப்பில் பிரயாணிகள் வார இதழ் ஒன்றுக்குத் தொடர்ச்சியாக கட்டுரை எழுதி வரும் ஒருத்தி தன் 13 வது கட்டுரைக்காக 'வானவில்' கிராமத்துக்குச் செல்கிறாள். அந்தக் கிராமத்தவர்களின் அதிசிறந்த விருந்தோம்பலும் முகங்களில் தவழும் புன்னகையும் அவளைப் பெரிதும் கவர்கின்றன. ஆனால் இதனைப் பொறுக்க மாட்டாத 'சவப்பெட்டி தூக்குவோர்' நகரத்தின் கவர்ச்சி மிக்க தலைவி ஹெலிகாப்டரை அனுப்பி, கட்டுரையாளரை தன்னுடைய நகரத்துக்கும் வரவழைக்கிறாள். கட்டுரையாளரின் மனதைப் பல வழிகளிலும் மாற்றி வானவில் கிராமம்பற்றி வரவிருந்த கட்டுரையைத் தடுத்து தனது நகரத்தைப் புகழ்ந்து எழுதும் நிலைக்கு அவளைக் கொணர்கிறாள். அடுத்த கட்டமாக வானவில் கிராமம் அடக்கி, ஒடுக்கி அழிக்கப் படுகின்றது.

இன்னொரு கதையில் ஒரு தந்தையிடமிருந்து மகனுக்கு இவ்வாறு கடிதமொன்று வருகின்றது. 'என் நேசத்துக்குரிய ஆபிரிக்காவின் சாம்பல் கிளி நேற்றைய இரவிலிருந்து காணாமல் போய் விட்டது. எங்கிருந்தாவது அந்தக் கிளியைக் கண்டுபிடித்து என்னிடம் ஒப்படைக்கவும்.'

மற்றொரு கதையில் மூன்று மனிதர்கள் மூன்று வெவ்வேறான ரெட்வூட் மரங்களிலே தூக்கில் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். சடலங்களின் அருகே மூன்று சித்திரங்கள் காணப் படுகின்றன . இது தற்கொலையா அல்லது கொலையா எனக் கண்டறியும் பணி அந்தப் பகுதிப் புலனாய்வு அதிகாரியான திருமதி .புளோரியாவிடம் ஒப்படைக்கப் படுகிறது.

மற்றொரு கதையில் எலோரா என்றொரு வளரிளம் பெண் வருகிறாள். பாடகியான அவள் ஒரு கற்பனை உலகத்தில் வாழ்கிறாள். தான் ஐம்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைல் தொலைவிலுள்ள தீவொன்றின் அரண்மனையில் அதன் ராணியின் அழைப்பை ஏற்றுப் பாடவிருப்பதாகவும் தன்னை அழைத்துச் செல்லக் கடற்குதிரை வருமெனவும், தீவில் தான் தங்குவதற்கென விசேடமாகத்தயாராகும் மாளிகை பற்றியும் பிரலாபிக்கிறாள். ஒரு நாள் திடீரெனக் காணாமலும் போகிறாள்.

இன்னொரு கதையில் ஹம்பிரி என்ற சிற்றுண்டியகத்தில் மூவர் கூடி உரையாடிக் கொண்டிருக்கின்றனர். அந்தப் பிரதேசத்தில் எதிர்பாராத விதமாகத் தோன்றி மறைந்து போன இரட்டைத் தலை சர்ப்பத்தை அவர்கள் கண்டு பிடித்தாக வேண்டும். ஏனெனில் கரப்பான் பூச்சிக்கே பயந்து சாகும் தன்னுடைய மகன் மனைவியுடன் அங்கு விரைவில் வரவிருக்கிறான்.

இன்னொரு கதையில் நிறுவனமொன்றில் மேலாளராகப் பணியாற்றும் ஒருவன் தினமும் வீடு திரும்பும் போது பூச்செண்டு வாங்கிச் செல்லுகிறான். சந்தோஷமாகத் தான் பணியாற்றுகிறேன் என்பதை தன் மனைவிக்குக் காண்பிப்பதன் அடையாளம்தான் இந்தப் பூச்செண்டு என நிறுவனத்தின் உரிமையாளரிடம் காரணமும் தெரிவிக்கிறான். ஆனால் உண்மையில் அவன் மனைவி இறந்து ஆறு வருடங்கள் ஆகின்றன.

மற்றொரு கதையில் ஜகுவார் பற்றி சொல்லப்படுகிறது. ஜகுவாரின் கதை வெறும் கற்பனைக் காவியமல்ல. நிஜமாக வாழ்ந்த ஒருவனின் சரிதம் என்பதை ஜகுவாரின் கொள்ளுப் பேரனின் கொள்ளுப் பேரனான பைலீஸ் என்பவன் கண்டு பிடிக்கிறான்.

**நௌஷாத்துடன் ஒரு சாதாரண வாசகன் சமாந்தரமாகப் பயணிப்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. பல்துறை அறிவு வாசகனுக்கு வாய்க்கப் பெற்றால் அவருடனான கதைப் பயணம் உவப்பானதாக இருக்கும். அவருடைய படைப்புலகத்தின் அடியாழத்தில் ஓடிக்கொண்டிருக்கும் சூட்சும நீரோட்டத்தை உய்த்துணர இலக்கியப் பயிற்சியும் இருக்க வேண்டும். வெறும் ஒற்றையும் தட்டையுமான எழுத்துக்கு மாற்றீடாக இத்தகைய கதைகளைக் கொள்ளலாம்.**

இறுதிக் கதையில் ஸிஸாரியா என்பவள் தான் மரங்களோடு பேசுவதாகவும் அப்போதெல்லாம் தான் பட்டாம்பூச்சியாக மாறுவதாகவும் தன்னை ஓநாய்கள் துரத்தி வருவதாகவும் கணவனிடம் கூறுகிறாள்.

இந்த எட்டுக் கதைகளிலுமே நௌஷாத் சில சித்திரங்களைத் தடயங்களைப் போல் விட்டுச் செல்கிறார். அத்தகைய சித்திரங்களில் சில தெளிவாகவும் பல மங்கலாகவும் உள்ளன. உள்ளேயிருப்பவரை அடையாளம் காண முன்னர் வாகனம் நகர்ந்து விடும் நிலைமை. ஏணியால் நாம் மேலேறுவதும், பாம்பால் விழுங்கப் பட்டு கீழே வருவதுமான ஒரு விளையாட்டுக்குள் நாம் நம்மையறியாமலே நுழைகிறோம். தன்னைப் பின் தொடர்பவர்கள் தன்னுடைய இலக்கை அறிந்து விடக்கூடாது என்பதற்காக செல்லும் திசைகளை மாற்றுவதும் குழப்புவதும் தன் தலையை மறைப்பதுமாக நௌஷாத் வேடிக்கை காட்டிச் செல்கிறார்.

நௌஷாத்தின் கதைகள் வெறுமனே புதிர்களின் பாதையில் விசித்திரமான உலகத்துக்கு நம்மை அழைத்துச் செல்வன மட்டும்தானா என்றால் அப்படியில்லை. 'அவன் ஏன் நரமாமிசபட்சணியாக மாறினான்?' என்ற முதலாவது கதையில் ஒளிந்திருக்கும் நுட்பமான அரசியலை எந்தவொரு தேர்ந்த வாசகனும் கண்டு பிடித்து விட முடியும். அதற்கான தடயங்கள் அங்கே உள்ளன. பிள்ளைகளின் இயல்பான ஆற்றல்களைக் கிள்ளியெறிந்து தங்களுக்குத் தோதான வில்லாக அவர்களை வளைக்கப் பார்க்கும் பெற்றோர்களின் உலகத்தை 'அலங்காரப் பதுமை அரண்மனையில் பாடஇருக்கிறாள்' கதையில் காணலாம். ஓநாய்களைப் போன்ற மூன்று மனித மிருகங்கள் ஒரு பட்டாம்பூச்சி போன்ற ஒரு பேதைப் பெண் மேல் நிகழ்த்திய கூட்டு வன்புணர்வின் கொடுமையை 'மரத்துடன் பேசுதல் என்ற புனைவும் பட்டாம்பூச்சி என்ற நிஜமும்' கதையில் சந்திக்கலாம்.

நௌஷாத்தின் கதைகளின் தலைப்புகள் போலவே கதை மாந்தர்களின், இடங்களின் பெயர்கள், நிலக் காட்சிகள் எல்லாமே விசித்திரமானவை. இவையெல்லாம் நமக்கு அண்மித்தவையாக இல்லாததால் ஒருவித அந்நியத் தன்மையுடன் சற்று மருட்டிப் பார்க்கின்றன.

அத்துடன் நௌஷாத் கையாளும் மொழி நடையும் சற்று வித்தியாசமானது. மொழி பெயர்ப்பைப் படிப்பது போன்ற உணர்வை அவர் உருவாக்க விரும்புகிறார். எனினும் வாக்கியப் பிரயோகங்களில் சில உறுத்தல்களை அது விளைவித்து விடுகின்றது. ஓரிடத்தில் 'அவர்கள்தான் மிகவும் முக்கியமான மண்ணின் மைந்தர்கள் எனக் குறிப்பிடுகிறார். 'அவர்கள்தான் மண்ணின் மிகவும் முக்கியமான மைந்தர்கள்' என அந்த வாக்கியம் அமைந்திருக்கலாம்.

'என்னுடைய அருந்தும் பானம் திராட்சை ரசம்' என இன்னோரிடத்தில் குறிப்பிடுகிறார். அந்த சொற்தொடர் 'நான் அருந்தும் பானம் திராட்சை ரசம்' என்று வந்திருக்கலாம் .

'செதுக்கிய நல்ல மனிதர் என்று நீங்கள் நம்பிக் கொண்டிருக்கும்' என ஓரிடத்தில் வருகிறது. அது 'கடைந்தெடுத்த நல்ல மனிதர் என்று நீங்கள் நம்பிக் கொண்டிருக்கும்' என்றிருந்தால் இன்னமும் பொருத்தமாக இருந்திருக்கும்.

'எப்போதும் அங்கே வாழக் கூடிய பாட்டி' என ஓரிடத்தில் அவர் குறிப்பிடுகிறார். 'எப்போதும் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கும் பாட்டி' என்று அது அமைந்திருக்க வேண்டியது.

'அவர்கள் என்னுடைய பிறந்த நகரத்தின் மீது குண்டுமாரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிந்தார்கள்' என அவர் எழுதியிருப்பது 'அவர்கள் நான் பிறந்த நகரத்தின் மீது குண்டு மாரி பொழிந்தார்கள்' ன்று அமைந்திருக்க வேண்டும் .

இன்னொரு விஷயத்தை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். சில விதி விலக்குகளைத் தவிர நௌஷாத்தின் கதைகளில் வரும் பெண்கள் பேரழகிகளாகவும், மன அழுத்தத்தினால் அவதியுறுபவர்களாகவும் இருக்கிறார்கள். பொருந்தா மண வாழ்க்கைக்குள் சிக்கிக் கொண்டவர்களாகவும் உழல்பவர்களாகவும் இருக்கிறார்கள். உள்ளன்பை சொரியாதவர்களாக, பேராசைக்கோ அல்லது நிராசைக்கோ பலியானவர்களாக இருக்கிறார்கள். நௌஷாத் சிருஷ்டிக்கும் ஆண்களோ பெண்களைப் புரிந்து கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். தங்கள் பெண்டிருடன் முரண்படுகிறார்கள். தாங்கள் கட்டியெழுப்பும் உயர்ந்த மதில்களும், அவர்களுக்கு அன்பளிப்பாக வாரி வழங்கும் ஆடை ஆபரணங்களும்தான் தம் பெண்டிரைத் தம்மிடம் தக்க வைக்கும் என நம்புபவர்களாக இருக்கிறார்கள்.

இந்தத் தொகுதியில் எனக்கு மிகவும் பிடித்த கதைகளாக 'அவன் ஏன் நரமாமிச பட்சணியாக மாறினான் ?' 'பூச்செண்டு போல் ஒரு மனிதன்' மரத்துடன் பேசுதல் என்ற புனைவும் பட்டாம்பூச்சி என்ற நிஜமும்' ஆகிய மூன்று கதைகளையும் சொல்ல முடியும்.



## 3. அலறியின் 'துளி அல்லது துகள்'

அலறியின் மலர்ச்சியான முகத்தைப் போலவே அவருடைய படைப்புகளும் வாசகர்களை ஈர்க்கக் கூடியவை. அவருடைய ஈரம் நிரம்பிய உலராத சொற்சிக்கனம் மிக்க மொழிநடை அவருடைய பலம் என்று சொல்லலாம். நீளத்திலும் அகலத்திலும் குறைவான அளவுகளைக் கொண்ட அவருடைய கவிதைகளை புத்திசாலித்தனமோ அல்லது அறிவுஜீவித் தனமோ வழிநடத்துவதாகத் தெரியவில்லை. ஒரு காதலன் அங்கே இருக்கிறான். அந்தக் காதலன் இயற்கையை நேசிக்கிறான். பெண்களை நேசிக்கிறான். மானிடர்களை நேசிக்கிறான். மாயச்சுழி கொண்ட அரசியலை நேசிக்கிறான்.

ஒருகாலத்தில் கவிதைகள் ஓசைநயத்தால் அளக்கப் பட்டன. பின்னொருகாலத்தில் கவிதையில் படிமங்கள், உருவகங்கள் என்பன இன்றியமையாதவை எனச் சொன்னார்கள். அதன் பின்னர் கவிதையின் இருண்மையான தன்மையையும், வலிந்திழுத்த படிமங்களையும் கொண்டாடினார்கள். ஆனால் இந்த நிபந்தனைகளையெல்லாம் புறந்தள்ளியபடி, இரண்டாயிரமாண்டு பாரம்பரியம் கொண்ட தமிழ்க்கவிதை தன்னைப் புதுப்பித்த படி நகர்ந்து கொண்டேயிருக்கிறது. எளிமையான சொல்லாடல்களிலும் சிறப்பான கவிதைகளைக் காணும் ஒரு காலகட்டத்தில் நாம் இன்று இருக்கிறோம்.

இந்தக் கவிதையில் அலங்கார மொழியோ படிமங்களோ உருவகங்களோ இல்லை. மனதின் விசித்திரத் திரையில் ஒரு கண நேரத்தில் தோன்றி மறையும் மின்னலொன்று பதிவாகியிருப்பதைக் காணலாம்.

அலறியின் கவிதைகளிலும் இத்தகைய 'மன மின்னல்கள்' உண்டு. ஆனால் அவை சாதாரண சொல்லாடல்களால் ஆனவையல்ல. ஏற்கனவே நான் சொன்னது போல் ஈரலிப்பான மொழியால் பதனிடப் பட்டவை. ஒரு நிகழ்வை மையப்படுத்திய /ஒரு கதையின் போர்வையைக் கொண்ட / நம் புராணங்களையும் திணைகளையும் நினைவுபடுத்துகின்ற/ விடுகதைப் பாணியில் சொற்களைத் தாயமாக்கி விளையாடுகின்ற / நினைவேக்கங்களை மீட்டிப் பார்க்கின்ற / சுய அங்கலாய்ப்பும் பெருமூச்சும் வெளிப்படுகின்ற / பயணங்களின் காட்சிகளிலும், பரவசத்திலும் கரைகின்ற, காமச் சுனையாடுகின்ற அவருடைய எல்லாக் கவிதைகளிலுமே ஓர் ஈரலிப்பான மொழி தீராத நதியாக ஓடிக் கொண்டிருக்கிறது

அதனால்தான் அவருடைய கவிதைகளில் நான் எதிர்கொள்ள நேர்ந்த சில வரிகளில் மிகவும் திளைத்துப் போய் நின்றேன்.

'நூறாண்டு காலம் வளைந்தும், இழுத்தும் / வலைக்குள் சிக்காத கடல்' என்கிறார் அவர்.

'வைக்கோல் கற்றைகளில் நிரம்பியிருந்தன
வயல்
வயிறு
வாழ்வு' என்கிறார் இன்னோர் இடத்தில்.

'கால்களில் காற்றை அள்ளிக் கொண்டும்
தலையில் சூரியனை சுமந்து கொண்டும்
தாழும் பறவைக்கு
தட்டுப் படவில்லை ஒற்றை மரமாவது' என்கிறார் ஒரு கவிதையில்.

இன்னொரு கவிதையில்
மலைகள் வாசலாய்த் திறந்திருந்தன
மலையடிவாரம்
எப்போதும் பெறாத வர்ணத்தைப் பெற்று
மோனத்தில் ஒளிர்ந்தது' என்கிறார்.

அலறியின் மற்றொரு கவிதையில்-
பன்னிரண்டு குதிரைகளின் முதுகில்
தாவிச் செல்கிறது சூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்வாளின் மினுக்கம்
போர்க்கவசத்தின் பளபளப்பு' என்கிறார்.

சமகால அரசியலைப் பூடகமாகச் சொல்லும் ஒரு கவிதையில்

' சிவப்பில் நட்சத்திரங்கள் மின்னும்
பட்டாடை விரித்துப் பாடிக்கொண்டிருக்கிறாள்
சீனத்துப் பெண்
அவள் பாடலில்
தாழம்பூ வாசம்
பாம்பின் படம்' என்கிறார்.

பாடகர் எஸ்.பி . பாலசுப்ரமணியத்தை நினைத்து 'மண்குடத்தில் பழுத்த நீரென குளிர்ந்து சொட்டுகிறது' என நெகிழ்கிறார் . இவையெல்லாம் அலறியின் மொழியாளுமையினதும், கலை முதிர்ச்சியினதும் அடையாளங்கள்.

ஆங்காங்கே சில வரிகளைச் சொன்னேன். அவருடைய சில கவிதைகளை முழுமையாகப் படிக்கும்போது கிடைக்கின்ற அனுபவம் வேறாக இருக்கிறது. சில கவிதைகளைப் படிக்கும் போது நமது இருண்ட அறையின் திரைச்சீலை விலகி பொன்னொளி பரவுவதைப் போல் மனம் பரவசம் கொள்கிறது. சில கவிதைகளைப் படிக்கும் போது அவை இன்னும் சற்று ஆழமாக வேரோடியிருக்கலாமோ என மனம் அங்கலாய்த்துக்கொள்கிறது. சில கவிதைகள் கச்சிதமான வடிவங்களை எட்டிப் பிடிக்க சில கவிதைகளோ பூரண வண்ணங்களைப் பெறாமல் பின் தங்கி நிற்கின்றன.

அலறியின் சில கவிதைகளில் காமம் ஒரு பின்னணி இசையாகப் பரவுவதை அவதானிக்கலாம். இது சுத்திகரிக்கப்பட்ட காமமாக இல்லாமல் ஓர் ஆணின் இயல்பான பார்வையாக வெளிப்படுவதால் கவனத்துக்குரியதாகின்றது.

அலறியின் காமத்துப் பாலை என் மொழியில் சற்று மாற்றிக் கூறுகிறேன். மலைகள் வாசலாய்த் திறந்திருக்கின்றன. சமவெளியின் விரிப்பில் படுத்தபடி அவள் நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருக்கிறாள். அடர் இருளிலும் அவள் கண்கள் அவன் மேல் ஊர்கின்றன. இதழ்களின் இறுக்கத்தில் ஊறிய நீர் எவருடையதென அக்கணம் புரியவில்லை. பாம்புகள் போல் பிணைகின்றனர். ஊற்றெடுத்த உவர் நீர்ப்பெருக்கு ஈற்றில் உலர்கிறது. அவன் புரண்டு படுக்கிறான். எப்போதும் கிடைக்காத அபூர்வ வர்ணத்துடன் அந்த மலையடிவாரம் மோனத்தில் ஒளிர்கிறது .

.அலறியின் இன்னொரு கவிதையில்

' அள்ளிப் பருகுகின்றேன் அதிலொன்றை
பருத்த பெண்ணின் முலையென' என்னும்

வரிகள் வருகின்றன.

' கலவி உச்சத்தில் புடைக்கும்
கழுத்து நரம்பென
கரும்பச்சைக் கோடுகள்
மஞ்சள் மேனியெங்கும் நீளும் இரம்மியம்' என

இன்னொரு கவிதையின் வரிகள்.

இறுகப் பின்னிய போர்வைக்குள்
இறகுகள் நீவிப் பறக்கிறது
தகதகப்பு
தண்ணீரில் ஆடும் தண்டு
அலைகள் அடங்கும் இரவு ..

இத்தகைய விபரிப்புகளை errotic ஆக சிலர் காணக் கூடும். இந்த விமர்சனங்களை எல்லாம் பொருட்படுத்தாத அலறியின் ஓர்மத்தை நான் பாராட்டவே செய்வேன்.

சில விமர்சகர்கள் தாங்கள் அமைத்து வைக்கும் 'பாதைத் தடை' களுக்கு அமைவாகப் படைப்பாளி என்பவன் பயணிக்க வேண்டுமென விரும்புகிறார்கள். ஒரு படைப்பாளியின் பணி இத்தகைய தடைகளைத் தகர்த்தெறிந்து விட்டுத் தான் விரும்பும் பாதையில் பயணிப்பது . எப்போது ஒரு கவிதை மற்றவர்களைத் திருப்தி செய்ய நினைக்கிறதோ ,சமரசம் செய்து கொள்ள நினைக்கிறதோ அந்தக் கணத்திலேயே பாசாங்கு செய்யத் தொடங்குவதாக அர்த்தம்.

கவிஞர் அலறி ஓர் அரசியல்வாதியும் கூட. அந்தப் பாத்திரமும் 'வேட்பாளன்' /, 'வாக்குத் தேடி' ஆகிய கவிதைகளில் தோன்றி மறைகின்றது.

உள்ளூர் மற்றும் உலகளாவிய அரசியலை நேரடியாகவும் பூடகமாகவும் பேசுகின்ற கவிதைகளும் இந்தத் தொகுப்பிலுண்டு.

ஒரு படைப்பாளியின் புதிய நூலைப் பார்க்கும் போது ஏற்கனவே வெளிவந்த அவருடைய படைப்புகளுடனும் நூல்களுடனும் ஒப்பீடு செய்ய / மனம் விழைவது இயற்கை. அவர் பயணம் முன்னோக்கி நகர்ந்திருக்கிறதா, பார்வை கூர்மையடைந்திருக்கிறதா விசாலமடைந்திருக்கிறதா மொழியழகு மேலும் மெருகேறியுள்ளதா அல்லது கூறியதையே கூறுகிறாரா தேக்கமடைந்திருக்கிறாரா அல்லது கும்பகர்ணத் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டாரா என்ற கேள்விகளுக்கெல்லாம் விடை தேட மனம் முயற்சிக்கும்.


என் பார்வையில் அலறியின் முன்னைய கவிதைகளில் இருந்த அடர்த்தியையும், அழகும் பொருளும் கை கூடிய சொல்லாட்சியையும், இந்தத் தொகுப்பின் பெரும்பாலான கவிதைகளில் காணக்கிடைக்கவில்லை. இந்தத் தொகுப்பின் பெரும்பாலான கவிதைகளில் கட்டிறுக்கம் குறைந்து ஒரு ஐதான நிலை தெரிகிறது. உள்தரிசனங்களுக்கு வாய்ப்புத் தராத ஒரு 'விரி நிலை' யால் பல கவிதைகள் ஓர் உயர்ந்த தளத்தை எட்ட முடியவில்லை. இந்தப் பலவீனங்களை எல்லாம் தாண்டி அவருடைய ஆற்றலுக்கு அடையாளமான கவிதைகள் இல்லாமலில்லை. துளி அல்லது துகள் / மருவும் மருதம், அந்தப்புரப் பறவை – நித்தியப் பறவை / வல்லபம் /சீனத்துப் பெண்-வல்லாதிக்கம் /ஒரு சொறங்கை பேரீச்சம்பழம் / மலை-ரயில்-கடல் / வெள்ளைக்காரி – அந்நியச் செலாவணி ஆகிய கவிதைகளை நாம் சிலாகித்துக் கூற முடியும். அதற்காக இதர கவிதைகள் மோசமானவை என்று அர்த்தமில்லை. வெறும் மொழியழகை மாத்திரம் கொள்ளாமல் அனுபவத்தின் வெளிச்சமும் அங்கே ஒளிர்வதால் அவை வெறும் சொற்கூட்டங்களாகும் நிலையிலிருந்து தப்பிக்கின்றன.

நூல் மிகவும் அழகாக அக்கரைப்பற்று PAGES புத்தக இல்லத்தினால் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. பெருமளவு பிழைகள் களைந்த இந்த நூல் வடிவாக்கத்துக்காக பதிப்பாளர் நண்பர் சிராஜ் மஷ்ஹூர், நூலாசிரியர் அலறி ஆகியோரைப் பாராட்ட வேண்டும். நண்பர் றியாஸ் குரானா மிகவும் பொறுப்புணர்வுடன் தன் பார்வைக்கேற்ப முன்னுரையை வழங்கியுள்ளார் றஷ்மி அழகிய விதத்தில் இந்த நூலுக்கான அட்டையை வடிவமைப்பு செய்திருக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயசரிதையோ இல்லை சுயசரிதையின் சாயலிலோ எழுதப்படும் நூல்கள் தமிழில் சர்ச்சைக்குரிய விசயங்களை பெரும்பாலும் தவிர்த்துவிட்டு ஒரு புனித முகம்தாங்கி வருவது வழக்கம். சமீபத்தில் வெளிவந்த தனுஜா போன்ற நூல்கள் இங்கே அரிது. முற்றிலும் நேர்மையாக, வாழ்வில் பாதித்த எல்லா விசயங்களையும் சொல்லும், குஷ்வந்த் சிங்கின் *Truth, Love & a Little Malice* போன்ற நூல்கள் தமிழில் இல்லை என்று சொல்வோர் அவசியம் படிக்க வேண்டியது இவரது நாடோடித் தடம். அதன் முன்னுரையில் சொல்கிறார் "நம்மையே நமக்கொரு காணும் பொருள் ஆக்கி நம்மிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்கிறோம்". உண்மை, நம் வாழ்க்கையின் பார்வையாளனாக நம்மை ஆக்கிவிட்டால் பின் இன்பமோ துன்பமோ எல்லாம் ஒன்று என்ற சமநிலை வந்துவிடுகிறது.





ராஜசுந்தரராஜன் அடிப்படையில் கவிஞர். உயிர்மீட்சி, முகவீதி என்ற இரண்டு கவிதைத் தொகுப்புகளும், நாடோடித்தடம் என்னும் தன்வரலாற்று நூலும் இவரது படைப்புகள். இரண்டு கவிதைத் தொகுப்பும் இவரது மொத்தக் கவிதைகளாக தாய்வீடு என்ற பெயரில் ஒரே தொகுப்பாக வந்துள்ளது. எனவே தாய்வீடு, நாடோடித்தடம் இரண்டுமே இவரது நீண்ட இலக்கிய வாழ்க்கையில் பதித்துச் செல்லும் தடங்கள். எந்த அளவுகோலிலும் இது மிகக்குறைவான எழுத்து.

நாடோடித்தடத்திலிருந்து:

" தோய்ந்தால்தானே ஒன்றைத் துய்த்தறிந்த நினைவு வந்து கூடுகிறது?"

" அவள் அப்படி ஒன்றும் பருவப் பெண் இல்லை; பருவப் பையன்கள் மருகக் கனவாததோர் உருவப் பெண்ணும் இல்லை".

"தொடுவானில், வெள்ளிப் பிழம்பின் பெருவட்டச் சுறுசுறுப்பு விளிம்பு காட்டத் தொடங்கையிலேயே, நம் கண்வெருண்டு நோட்டம் உதற, கனலும் விடியல்".

ராஜசுந்தரராஜனின் எழுத்து பாசாங்கில்லாதது. இறைச்சி பின்னால் போகும் நாய்போல் அழகான பெண்கள் பின்னே சுற்றினேன் என்று நண்பர்களிடம் சொல்லவும் தயங்குவோம். அது போன்ற விசயங்கள் இவர் எழுத்தில் நூல் முழுதும் பரவலாகவருகிறது.

நல்ல பதவியில் இருந்திருந்தும் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று ஒரு வாழ்க்கை. குவைத், குஜராத், ஆந்திரா போல பல இடங்களுக்கு வேலை நிமித்தம் பயணங்களும், தங்கலும். அனுபவங்கள் இவரைத் தேடிவந்ததோ இல்லை இவர் தேடிப்போனாரோ நாலுபேரின் வாழ்க்கையை ஒரு ஆளாக வாழ்ந்ததுபோல் ஒரு வாழ்க்கை.

தற்கொலை செய்துகொள்ளலாமா என்ற சிந்தனை மனதைக்கடந்து சில மணித்துளிகளுக்குள் வாழ்வின் கொண்டாட்டத்தைத் தேடி இருக்கிறார். அந்த பலவீனமான கணத்தைக் கடந்து விட்டால் தற்கொலை இல்லை என்பதைத் தாண்டிக்கொண்டாட்டங்களில் ஈடுபடும் மனநிலை எல்லோருக்கும் வருவதில்லை. வந்ததை வரவில் வைப்போம், சென்றதை செலவில் வைப்போம் என்று வாழ்க்கையின் கொம்புகளைப் பிடித்து எதிர்கொள்ளும் மனநிலை.

*Grand road traffic signal* போன்ற அனுபவங்கள் கண்டிப்பாக சொல்லப்பட வேண்டியவை. அந்த சம்பவத்தை விவரிப்பதில் எவ்வளவு நேர்மை இருக்கிறது பாருங்கள். ஆனால் நூல் முழுக்கதன்சை பிரகாஷின் மீனின் சிறகுகள் கதை இந்தநூலிலும் வருவது அலுப்பூட்டுகிறது. நாடோடி வாழ்க்கையில் எத்தனை அனுபவங்கள் இருந்திருக்கும்! அதுபோக வீட்டில் அமராமல் இவர் தேடிச்சென்ற அனுபவங்கள் எவ்வளவு இருந்திருக்கும்! இவர் சொல்லிய விக்கிரமாதித்தன் கதையை

## ராஜசுந்தரராஜனின் படைப்புலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாமுழுதும் எத்தனை வடிவங்களில் கேட்டிருப்போம்! அதுபோல் சொல்வதற்கு ஆயிரம் இருந்திருக்கும் இவருக்கு. தொடராக வந்தபோது மடைமாற்றுவோர் இல்லாக்குறை.

கடைசிக் கட்டுரை தயாநதியில் உணர்ச்சி வெள்ளம் பெருக்கிடுகிறது. அம்மா இறந்த கட்டுரை கூட தகவலாய்க் கடக்கிறது. வாழ்வின் பொருள் நீடுவாழ்வது என்கிறார். யோசித்தால் அதுவும் உண்மை. நீடுவாழ்ந்தால் நிறை குறை நிரம்பியே இருக்கும். எந்தத் தயக்கமும், பாசாங்கும் இல்லாது இவர் போல் எழுதுபவர் வெகு குறைவு. நாடோடித்தடம் இரண்டாம் பாகம் வரவேண்டும்.







மேலே புத்தகத்திலிருந்து எடுத்தவரிகள்போல், இவர் உரை நடையின் நடுவில் கவிதை கலப்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். கவிஞர் ராஜசுந்தரராஜன் மொழிஅழகினால் அசல் உயரத்தை விட அரையடியேனும் உயரமாய் இருப்பது போல்தோன்றுகிறது. தாய்வீடு தொகுப்பிலிருந்து வெகு சில மாதிரிக் கவிதைகளைப் பார்க்கலாம். இருநூறு பக்கங்கள் தாண்டிய பெரிய புத்தகம் இது.

மரமேறியின் கவிதை அல்ல இது. வேறு சூழலில் பொருத்திப் பாருங்கள்.

" தடிமமரம் தொற்றி ஏறுதல்தானே
கடினம் அது கழிந்தால்
முடிமரம் உலுக்க
கிளைகள் படி அமைக்கும்"

எண்ணெய் தேய்த்து உருண்டாலும் ஒட்டுவதே ஒட்டும். ஆனைக்கொருகாலம் முடியட்டும் என்று காத்திருத்தல் பயன் இல்லை. மீண்டும் ஆனைக்கே காலம் வரும்.

" நாக்குத் தொங்கவாய் நீர்வடிய
நாறுகிற திசையெல்லாம் ஓடுதுநாய்
கரணம் போட்டுக்கட்டிய வீட்டில்
இருந்து தின்னுது சிலந்தி"

தீராத சோகத்தில் சகலஜீவராசிகளும் மகிழ்ச்சியாக, காலம் உங்களைத் தன்னந்தனியாக நடுவீதியில் நிறுத்தி ஒருவார்த்தை சொல்லாமல் விரைந்து சென்றதைப் பார்த்திருக்கிறீர்களா?

"குப்புற விழுந்துகு முறலாம்
கூரையை வெறித்து பெருமூச்சு விடலாம்
வரப்போவதில்லை
இனி அவள்வரப் போவதில்லை
முடுக்க மறந்த கடிகாரம்
கிழிக்க மறந்த நாட்காட்டி
வீட்டுக்கு வெளியே எனக்கென்ன என்று
இரவாகிப்பகலாகி இயல்கிறதுகாலம்".

நிஜம் விலகும் சாலைகளில் இந்த நிழல்கள் கூடிமுயங்கி செய்யும் கும்மாளம்!

" ஒருசுடர்
ஒருநிழல்
இல்லைதொல்லை
இருள்போக்கவந்ததுகள்என்று
வழி நெடுக விளக்குகள்
ஒன்றின்மீதொன்று புரண்டு
குழப்பித் தொலைக்குது நிழல்கள்."

உரைநடையோ, கவிதையோ உடை ஒரு வேண்டாத எடை இவர் மொழிக்கு. மனதில் தோன்றுவதை தணிக்கை செய்யாது எழுத்தில் கொண்டுவர வெகு சிலரால்தான் முடிகிறது.

" முதுமை என்னைத் தோளணைத்து
தன் எல்லைக்குள் கொண்டு
போய்விட்டது என்றே தோன்றுகிறது
இல்லையா, என்காமுகமே
இருண்டு புரண்டு வந்தமழை
பெய்யாமலே பொங்கி வெளுத்துப்
போய்விட்டதென்ன?
பிறகும் என்னுள்ஏன்
இந்தப் பெரும்பாடு?
வேனிற்கால வெயிலில்
நிழல் தரவேண்டி
பனிக் காலத்தில்தானே
இலையுதிர்த்து புத்துயிர்த்த
இம் மரங்களின் கருணையே கருணை!
ஏலாமையின் கற்பித உச்சம்தான்
இல்லையா கவிதையிற் புலம்பல்?
ஆட்டுக்கறி வறுவலில் ஆசை
இட்லியைச் செரிக்கவே இடர்ப்படும்
வயிற்றின் உபரிமதிப்பு
உமிழ்நீர் இதற்கே"

வீடு என்பது வெறும் நாலு சுவர் ஒருகூரையல்ல. நினைவுகளின் சாட்சி. உணர்வுகளின்மீட்டுருவாக்கம்.

"வீடு கைவிட்டுப்போகையில்
இவள் போட்டவளைக் கைகூப்பிய
வாசற்கோலம்! அது இன்றளவும்
எனக்குள் ஒரு கூனல் நிறுத்தக்குறி"

மீராவால் அறிமுகப்படுத்தப்பட்டு, தேவதேவன், தேவதச்சன், பிரமிளால் செதுக்கப்பட்டவர். சுந்தரராமசாமி, கல்யாண்ஜி, கலாப்பிரியா போன்றவர்களுடன் நெடுங்காலம் பழகியவர். கவிதைமொழியும் அனுபவங்களும் கலந்துபட்டவர். முன்னுரையில் எதற்காக இன்னொருவாய்ப்பு வருமாஎன்று கேட்டிருக்கிறார் என்பது விளங்கவில்லை. பேசாப் பொருளைப் பேசத்துணிந்தவர் பேசாதிருத்தலின் நட்டம் வாசகருக்கே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசு தேவன் கவிதைகள்

## பாம்பு நுழைந்த வீடு

எதனூடாக நுழைந்ததென்று தெரியவில்லை
சமையலறை வாயு அடுப்பின் கீழ்
சரசரத்து சற்றைக்குள்
மண்டப தொலைக்காட்சிக்கு பின்னாலிருந்து
பளபளக்க தலை காட்டுகிறது

வெறும் வீடாயிருந்தால்
இங்கிருந்து கண்டு கொள்வேன்
எங்கிருக்கிறது என்று
அப்படியே மெதுவாய்
அப்புறப்படுத்தியும் விடுவேன்

ஆனால் இந்த வீட்டினுள்தான்
எத்தனை எத்தனை பொருட்கள்
பார்த்துப் பார்த்து அடுக்கி வைத்ததெல்லாம்
பாதுகாப்பு அரணாகி விட்டது அதற்கு

கண்டு கொள்ளவும் முடியவில்லை
கண்டுதான் கொண்டாலும் பொருள்கள்
உடையாமல் எங்ஙனம் ஓங்கி அடிப்பது
கண் இமைப்பதற்குள்
காணாமல் போய்விட்டால்
அத்தனை பொருட்களும்
அச்சுறுத்த ஆரம்பிக்கின்றன

வெளியேறியிருக்கும் என்பதை கடைசித் தேர்வாய் வைத்து
இங்குதான் எங்கோ இருக்குமென்று நம்பும் மனதுடன்
இந்த வீட்டிற்குள்ளே தான்
இருந்தாக வேண்டியும் இருக்கிறது
0

## எப்போதும் இருப்பது

சடுதியில் உதிர்ந்து
நாலா திசையும்
இறகுகளாய் அசையலானேன்

நிலத்தில் வீழ்ந்தவை
புற்களாய் முளைத்தன

மரங்களில் தங்கியவை
மலர்களாய் பூத்தன

காற்றில் மிதந்தவை
பறவைகள் ஆயின

வானத்திற் கேகியவை
வானவில்லாய் தோன்றின

எப்போதும் இருப்பதன்
இப்போது நான்!
0

## வானின் உயரம்

வானின் உயரம்
எது வரை

புல்லுக்கதன்
நுனி வரை

தென்னைக்கதன்
உச்சி வரை

பறவைக்கது
போகும் வரை


உனக்கு சிந்தனை
நீளும் வரை
0

## தண்ணீர் பயணம்

தண்ணீரால்
திரும்பி வர
இயலாது

அதனால்
அது
போகும் வழியெங்கும்
மரமாகி நின்று விடுகிறது
மானாகி ஓடி விடுகிறது
மயிலாகி பறந்து விடுகிறது
முகிலாகி மிதந்து விடுகிறது


தண்ணீரால்
திரும்பி வர
இயலாவிட்டால்
என்னவாம்
0





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூக்குத்தி அணிந்த பெண்ணுக்கு எழுதிய காதற்குறிப்புகள்



-இளங்கோ

1.

எழுத்தாளன் ஒருவன் எங்களை
ஒரே அலைவரிசைக்குள்
கொண்டுவந்தான். அவனின்
'பெண்களை'ப் பற்றிப் பேசிப்
பேசியே நமது இரவுகள்
நீண்டன. நாம் வாழ விரும்பும்
வாழ்வுக்கும், நம்மால் வாழ்ந்திட
முடியா வாழ்க்கைக்கும்
நடுவிலான இடைவெளியைக்
குறைத்த அந்தக் குடிகாரனின்
எழுத்துக்களில் சிலிர்த்த
கணங்களை நட்சத்திரங்களுக்கு
காணிக்கை செய்தோம். அவனுக்கு
இப்போது ஹெமிங்வே என்றோ
ப்யூகோவ்ஸ்கி என்றோ ஒரு
பெயரை விரும்பியமாதிரி
வைத்துக்கொள்வோம்.
எனது புனைவை வாசிக்கத்
தொடங்கியபோது
நீ செம்மதுவோடும்,
வர்ணங்களூட்டப்பட்ட
சொற்களோடும் கொண்டாடித்
தீர்த்தாய். ஒவ்வொரு
கொண்டாட்டங்களின் பின்,
பெரும்பாலும் எனக்கு எஞ்சுவது
ஒருவகை வெறுமை. நீயென்
பனுவலோடு எனக்கான
காதலைக் கொண்டுவந்தாய்.
புனைவுக்குள் இருப்பவனை நீ
நேசிக்கிறாய். நான் அதன் எந்தச்
சாயலும் இல்லாத ஒருவனெனச்
சொல்லித் தயங்கினேன்.
பிறகு நீயெனக்காய் கவிதைகளை
எழுதி அனுப்பத் தொடங்கினாய்.
இதுவரை குரல்களின் வழியே
தன்னைத் தொலைத்து
பெண்களை நேசித்தவன்
முதன்முதலாய் சொற்களினூடாக
நேசத்தைக் கண்டடைந்தான்.
ஒவ்வொரு நாளும் பத்து முத்தங்களோடு ஒரு பொழுதைத்
தொடங்க வேண்டுமென நீதான் சொன்னாய்.

2.

நள்ளிரவில் விழித்திருப்பவன், எண்ணங்களை ஒவ்வொரு இழையிழையாகப் பிரித்துப் பார்த்துக்கொண்டிருக்கின்றான். எந்த நூலின் இழையில் பதற்றத்தின் இருண்மை இருக்கிறது, எதில் பிறரைக் காயப்படுத்தும் கசப்பு இருக்கிறது என்று ஒவ்வொரு சிக்காய் எடுத்தெடுத்துக் களைத்துப் போகின்றான். அவனின் மனம்போலத்தான் இந்த இரவும் தூங்காதிருக்கின்றதோ? வெளியே அவ்வளவு பிரகாசம். ஆம், இப்போது மீண்டும் பனி பொழியத் தொடங்கிவிட்டது.
அறையின் திரையை விலத்திவிட்டு பனியைப் பார்த்தபடி இருக்கிறான். அவ்வளவு நிச்சலம். பனித்தூவல்கள் நிலத்தை மூடிக்கொண்டிருக்கிறது.
இப்போது இன்னுமின்னும் வேகமாக எண்ணங்கள் மனதைச் சூழ்கின்றது. ஏதேதோ திசையெங்கும் அவன் உதிர்ந்த இலையைப் போல அலைகிறான். மனது வெடித்து அழவேண்டும் போலத் தோன்றுகின்றது.
எவ்வளவு எவ்வளவுக்கு அவளை நேசிக்கின்றானோ, அவ்வளவுக்கு அவ்வளவு வார்த்தைகளில் காயப்படுத்துகிறவனாக ஏன் இருக்கிறேன் என யோசிக்கிறான். கீழ்மையின் இருள் இவனை இன்னும் அச்சப்படுத்துகிறது. நித்திரை வரா இரவு நள்ளிரவு தாண்டியும் மணிக்கணக்காய் நீள்கிறது.
கண்மணி, தொலைபேசி அழைத்து ஒரு வார்த்தை பேசாயோ? உன் மூச்சிழுப்பின் குரலின் அணைப்பில் நான் கொஞ்சநேரம் நிம்மதியாய்த் தூங்கவேண்டும்.

3.

உனது பாடல்களால் எனது குளிர் நிரம்பிய அறையினுள் வெம்மை பரவுகிறது. தாங்க முடியாத் துயரத்தை மூடி வைத்த என் இதய அறைகளை அவை ஒவ்வொன்றாகத் திறக்கின்றன. ஒருபோது நான் அருவியெனப் பாய்ந்து போகின்றேன், இன்னொரு பொழுது நானோர் மரத்தைப்போல கிளைகள் விரித்து சிரிக்கிறேன்.
நீ என் அறைக்குள் கொண்டு வருவது பாடல்களை மட்டுமல்ல. நான் இன்னமும் பயணிக்காத நாடுகளின் வாசனையையும், அவற்றில் இன்னமும் பாவாத என் காலடித் தடங்களையும் எடுத்துவருகிறாய்.
இசை என்பது கேட்பதற்கு மட்டுமென எல்லையிட்டு வைத்திருக்கின்றவனுக்கு, அவற்றை உணர்வதற்கும், ஏன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வதற்குமென என் அகத்தை
நானறியாமலே உன் பாடல்களால்
புல்லரிக்கவைக்கிறாய். நீ பாடும்
சில பாடல்களில் நான் தொலைந்து
போகின்றேன்.
எப்போதும் மூளை முழுதும்
எண்ணங்களால் நிரம்பி அவதியுறும்
நான் அப்போது மட்டும் ஏன்
இவ்வளவு நிர்மலமாக வானத்தில்
பறக்கின்றவனாக இருக்கின்றேன்.
சிலபொழுது புழுதி படந்த என்
ஊர் ஒழுங்கைகளில் -கவலைகள்
இன்னமும் தீண்டிடாது-
ஓடுகின்ற, ஒரு சிறுவனைப் போல
ஆகிவிடுகின்றேன்.
அன்பே முத்தங்களை மட்டுமல்ல,
பாடல்களையும் ஒருபோதும்
நிறுத்திவிடாதே!

4.
எத்தனை காதல்களை நாம்
கடந்து வந்திருக்கின்றோம். உன்
வார்த்தைகளில் சொல்வதனால்,
நீதான் நான் நேசிக்கும் முதல்
அற்புதப் பெண் என்று நானும், நீ
சந்திக்கும் அரிய ஆண் நான்தான்
என நீயும்' பொய்களைப் பேசாமல்,
நாம் இதுவரை கடந்து வந்த இனிய
காதல்களைப் பேசியிருக்கின்றோம்.
அதுவே நம்மையின்னும் பிணைக்க
வைத்திருக்கின்றது என்பதும்
அறிவோம்.
என்கின்றபோதும், ஏன் நீ
உனக்கு ஒரு அற்புதம் போலத்
தோன்றுகிறாய். ஏன் உன்
சிரிப்பைப் பார்க்கும்போதெல்லாம்
அந்தக் கன்னக்குழிக்குள்
புதைந்துவிடக்கூடாதோ எனத்
தோன்றுகின்றது. நீ கருமையை
இமைகளுக்குப் பூசுகையில் என்
மனது ஏன் இப்படிப் பூரிக்கிறது.
எல்லாவற்றுக்கும் அப்பால் இந்தக்
கருணை ததும்பும் இதயத்தை
எங்கிருந்து பெற்றாய்? எப்படி
உன்னால் இந்த வாழ்வின் இத்தகை
துயரத்துக்கும் சலிப்புக்கும் அப்பால்
பிறரைச் சிரிப்பால் வசீகரிக்க
முடிகிறது. எவ்வாறு உன்னால்
எல்லாப் பலவீனங்களுக்கும்
அப்பால் என்னை நேசிக்க
முடிகிறது.
எனக்கு மரங்கள் சூழ்ந்த நம் கனவு
வீட்டின் ஊஞ்சலில் உன் மடியில்
இருந்தபடி என் போர்க்கால
ஞாபகங்களைப் பகிர்ந்து
கடந்துபோகவேண்டும்!

5.
நான் எனது அறத்தின் கத்தியை எப்போதும் தீட்டியபடி
இருப்பவன். கொஞ்சம் கூர் குறைந்தாலும் என் இயல்பு
குலைந்துவிட்டதெனப் பதறுகின்ற ஒருவன்.
நீ அறத்தின் தராசைக் கொஞ்சம் தள்ளிவைத்தால் என்னவெனக்
கேட்பாய். அறமில்லா என் வாழ்வு என்ன அர்த்தமாகுமெனும்
பயத்தில் மீண்டும் மீண்டும் அறத்தின் கத்தியை கூராக்குவேன்;
அது இரண்டு பக்கங்களையும் காயப்படுத்தும் என்பதன் அர்த்தம்
விளங்காது!
உன்னைப் போல ஏன் என்னால் அதையதை அதனதன்
இயல்பென எடுத்துக்கொள்ள முடியாதிருக்கின்றது.
உடைகளைக் கொஞ்சம் தளர்த்துவதைப் போல இந்த அறத்தை
சிலபொழுதேனும் தள்ளிவைக்கும் ஒரு காலம் விரைவில்
வாய்க்கவேண்டும்.
'பிரியமானவரே' என்று நீ ஒரு கவிதையைத் தொடங்குவதைப்
போல நானும் ஒருநாள் அறத்தின் ஆடை களைந்து
உன்னோடு பேசத்தொடங்கவேண்டும் பிரியமானவளே என்று
சொல்லியபடி.

6.
உன்னைப் போல காதல் ஒன்று எப்படி உதிர்ந்து போகவேண்டும்
என்று வேறு எவரால் இவ்வளவு அழகாய்ச் சொல்லமுடியும்.
'உனக்கான எழுத்தையும், நீ விரும்பும் பயணங்களையும்
நிறுத்து என நான் சொல்கின்றபோது, காதல் என்னை விட்டுப்
போயிருக்கும். அதன்பிறகு எனக்காகக் காத்திருக்காதே' என்றாய்.
அன்பே, நீ அப்படிப் போகும் காலத்தில் நானொரு காட்டை
அல்லவா இழந்திருப்பேன் என்கிறேன்.
காதலுக்காய் தமது பிரபஞ்சங்களை இழக்க விரும்பாதவர்களை
என்னால் ஒருபோதும் நேசிக்க முடியாதெனச் சொல்லி
முத்தமிட்டாய்.

7.
எல்லாவற்றையும் விலத்தி அமைதியாக இருக்க விரும்புகிறேன்.
இருபது நிமிடம் கடிகாரத்தில் நேரத்தை ஓடவிட்டு அமைதியில்
மூழ்கிறேன். இன்னுமின்னும் தன்னை நிதானமாக்க
வேண்டுமென விரும்பும் மனது ஒரு மணித்தியாலம் வரை
நீட்சித்து, தன்னை தானே விழித்துப் பார்க்கிறது.
நிச்சலமனதில் விரியும் ஓவியத்தில் பிடிவாதமும்,பொறாமையும்,
காயப்படுத்தும் வார்த்தைகளும் அலையலையாய் எழுகின்றன.
அவற்றைப் பார்க்கப் பயமாய் இருக்கிறது. ஆனால் பார்க்காது
இந்த மாலையைக் கடக்கவும்முடியாது.
நான் யார்? ஏன் நான் இப்படி இருக்கிறேன்? ஏன் என்னால்
முழுமையான அன்பை எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாது
வழங்கமுடியாதிருக்கின்றது. நேசம் எனப்படுவது
தன்னிடமிருந்து இயல்பாய் வெளிப்படுவது அல்லவா?
சிலவேளைகளில் நீ என் மனதுக்கு உவப்பின்றி சிலதைச்
செய்யும்போது ஏன் மனது சுருங்கிப்போய் நேசத்தின்
எதிர்த்திசையில் எதையெதையோ பேசுகிறது/நினைக்கிறது/
எழுதுகிறது.
இந்தப் பனித்தூவல்கள் நிலத்தை வந்தடைகின்றபோது
அவ்வளவு பரிசுத்தமாய் இருப்பது போல, ஒரு சில
நொடிகளாவது உன் மீதான நேசம், எனதெல்லாக் கசடுகளையும்
தாண்டிப் பரிசுத்தமானது என்பதை எப்படியேனும் உனக்குப்
புரியவைக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8.

எனக்குப் பிடித்த கவிஞரின் கவிதையை நீயுனது குரலில் வாசித்துக் காட்டிய கணத்தில், கனவுகளில் மேகமாய் மிதந்துகொண்டிருந்த நான் வேர்களைப் பரவிய ஒரு மரமாகத் மாறத்தொடங்கினேன். என் கிளைகளில் வந்தமர்ந்த பறவையின் பாடல்களைக் கேட்பதற்காய் இலைகளில் பொன்மஞ்சள் வர்ணம் பூசும் இலையுதிர்காலத்தை கூடவே அழைத்து வந்திருந்தேன்.
நீ பாடும் பறவையெனில் உன் குரலில் மிதந்துகொண்டிருப்பவை மேகங்களா அல்லது நாம் இனிச் சேர்ந்து பயணிக்க இருக்கும் நிலப்பரப்புக்களா?

9.

ஒரு மணித்தியாலத் தனிமையின் பின் மனம் அவ்வளவு இலேசாக இருக்கிறது. ஒரு பனித்தூவலும் இப்படித்தான் எடையற்று இருக்குமோ? பனிநாளொன்றில் உதட்டை நீட்டும்போது நாவில் வந்து கரையும் பனிபோல உனக்கான நேசத்தை நான் விரும்பியமாதிரி தந்துவிட்டு இந்த உலகினில் இருந்து நீங்கிப் போய்விடவேண்டும்.
நான் அலைபேசியில் நீ அனுப்பிய புகைப்படங்களைப் பார்த்தபடி இருக்கிறேன். நேசம் ஒரு மழைக்கால நதியைப்போல பிரவாகித்து எழுகிறது. இவ்வளவு வசீகரமானவளை, நேசத்தை தளும்பத் தளும்பத் தருபவளை ஏன் புரிந்துகொள்ளாமல் ஏதேதோ எல்லாம் செய்துகொண்டிருக்கிறேன்.
இவன் இவ்வளவு வளர்ந்தபின்னும் இன்னும் ஒரு சிறுவனைக் கைவிடாது இருக்கிறான். அந்த
அடம்பிடிக்கும்
சிறுவன்
என்றேனும்
ஒருநாள் உன்
நேசத்தின்
கதகதப்பால்
தான்
விரும்பிய
ஓர் ஆடவனாக
மாறிவிடுவான் என்பதில்
நம்பிக்கை இருக்கிறது.
ஒரு மயிர்க்கொட்டிதானே
வண்ணத்துப்பூச்சியாக
உருமாறுகிறது அல்லவா?
உன் நெற்றியில்
முத்தமிடாது விடியும்
என் பொழுதுகளுக்கு
வர்ணங்களே
இருப்பதில்லை. கடந்தகால
நினைவாய் உதிராது என் நிகழ்காலமாக என்றும் கைகோர்த்தபடி இரு கண்மணியே!

10.

உன்னைப் போன்று இப்படி காதலிக்க முடிந்தவனை இதுவரை சந்தித்ததில்லையெனச் சொன்ன அதே பெண்களே, உன்னைப் போன்று வார்த்தைகளால் காயபப்படுத்தக் கூடிய ஒருவனையும் இதுவரையும் சந்திக்கவில்லையெனச் சொல்லியிருக்கின்றனர். கோபத்தையும், சலிப்பையும் உறங்கும் எரிமலையைப் போன்று வைத்திருக்கும் ஒருவனால் ஒருபோதும் இந்தக் கேள்வியை கடந்துசெல்ல முடிவதில்லை. அவனுக்குள் கோபம் பொங்கும்போது, தான் பார்த்து பார்த்துச் சேகரித்த அரிய பொழுதுகளை எல்லாம் எடுத்து எரிக்கத் தொடங்குவான். உங்களின் மிகப் பெரும் எதிரி உங்களுக்குள் இருக்கும் கோபம் எனச் சொல்கின்றார் புத்தர். தனது எதிரியென நினைத்து ஒருவனைக் கொல்ல அப்பிளில் நஞ்சைப் பூசிக் கோபத்துடன் காத்திருப்பவன் இறுதியில் தற்செயலாக தானே அதையே உருசித்து மாண்டுபோயிருப்பதை ஆன் ரணசிங்கேயும் எழுதியிருக்கிறார்.
வெஞ்சினத்தில் உச்சியில் நேசத்தின் நிமித்தம் நடந்த ஒவ்வொரு அற்புத கணத்தையும் எரிமலைக்குள் தூக்கி வீசியபடி இருக்கிறான்
ஒருவன். அவள் தடுக்க
தடுக்க சொற்களால்
தீப்பந்தங்களை
எறிந்தபடி உக்கிர
நடனம் ஆடுகின்றான்.
தன்னையும் எரித்துப்
பொசுக்க எரிமலைக்குள்
விழப்போவனை
தடுத்தாட்கொள்கிறது,
நேசத்தின் அரிய கரம்.
என்ன எனக்குள்
நடக்கிறதென்று அவனின்
சுயம் விழிக்கின்றபோது.
நான் போய்வருகின்றேன் என
அவள் என்றென்றைக்குமாய்ப்
பிரிந்துபோகின்றாள்..
காலம் பிந்திய மன்றாடல்கள்
சுவர்களில் எதிரொலித்து
நம்மை மனநோய்மை
செய்யும் பாவங்களிலிருந்து,
பிறகு நாம் ஒருபோதும்
தப்பிக்கவும் முடிவதில்லை.

0




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனையில் தங்க நகைகளின் அரங்கம்



Saravanaas Jewellers
சரவணாஸ் ஜுவலரி

16, வாடிவீட்டு வீதி, கல்முனை

16, REST HOUSE ROAD, KALMUNAI

PHONE: 067 2059734 / 077 4892005

வியூகம் அமைப்பிற்காக உமாவரதராஜன் அவர்களினால் வணசிங்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org